www.Padasalai.Net www.TrbTnpsc.com

குகை மேல்நிலைப் பள்ளி

சேலம் – 636 006

மேல்நிலை இரண்டாம் ஆண்டு

வணிகவியல்

5 முதல் 12 பாடம்

கருத்தியல் வினா – விடைகள்

PREPARED BY

G.PRAKASH. M.COM. M.PHIL. B.ED. D.TED

GUGAI HR.SEC. SCHOOL. SALEM -6

CONTACT - 9488270034

5. மூலதனச் சந்தை

I. குறு வினாக்கள் –

1. மூலதனச் சந்தை என்றால் என்ன ?

✓ மூலதனச் சந்தை என்பது நிதி பத்திரங்களை பிணையங்களை மற்றும் பங்குகளின் வர்த்தகத்தில் ஈடுபடும் வாங்குபவர்கள் மற்றும் விற்பவர்களை இணைக்கும் சந்தை ஆகும்.

2. OTCEI – சிறு குறிப்பு வரைக.

✓ **OTCEI** – இந்திய உடனடி பங்கு மாற்றகம்.
✓ பங்குகளை இந்தியா முழுவதும் மின்னணு மூலம் வியாபாரம் செய்யும் நோக்கத்தோடு நிதி நிறுவனங்களால் உருவாக்கப்பட்டதே **OTCEI** என்பதாகும்.

3. பரஸ்பர நிதி என்றால் என்ன ?

✓ சிறு முதலீட்டாளர்களின் சேமிப்புகளை பெரிய முதலீடாகமாற்றும் நிதி நிறுவனங்களையே பரஸ்பர நிதி என்கிறோம்.
✓ அதிகபலன், நெகிழ்வு தன்மை, வரியிலிருந்து பாதுகாப்பு போன்ற நன்மைகள் பரஸ்பரநிதி முலம் முதலீட்டாளருக்கு கிடைக்கிறது.

4. மூலதனச் சந்தையின் பங்கேற்பாளர்கள் யார் ?

✓ தனிநபர்கள்
✓ நிறுமங்கள்
✓ அரசு வங்கிகள் மற்றும்
✓ இதரநிதி நிறுவனங்கள் போன்றோர்களே மூலதனச் சந்தையின் பங்கேற்பாளர்கள் ஆவார்.

5. மூலதனச் சந்தையில் விலை எவ்வாறு நிர்ணயம் செய்யப்படுகிறது ?

மூலதனச் சந்தையில் பத்திரங்களின் விலை தேவை மற்றும் அளிப்பைப் பொறுத்து தீர்மானிக்கப்படுகிறது.

II. சிறு வினாக்கள் –

1. மூலதனச் சந்தையின் பல்வேறு வகைகள் என்ன ? விளக்குக

முதல்நிலைச் சந்தை –
✓ முதல்நிலைச் சந்தை என்பது புதிய வெளியீடுகளுக்கான ஒரு சந்தை ஆகும்.
✓ இது புதிய வெளியீடுகள் சந்தை எனவும் அழைக்கப்படுகிறது.
✓ முதல்நிலைச் சந்தை பொது மக்களுக்கு முதன் முதலில் வெளியிடும் பத்திரங்களை கையாளுகிறது.
✓ முதல்நிலை சந்தையில் கடனாளிகள் நீண்டகால நிதிக்காக புதிய நிதி பத்திரங்களை மாற்றம் செய்து கொள்கின்றனர்.

இரண்டாம் நிலை சந்தை –
✓ ஏற்கனவே வெளியீடு செய்யப்பட்ட பத்திரங்களுக்கான சந்தை இரண்டாம் நிலைச் சந்தை என வரையறுக்கப்படுகிறது.

- ✓ ஏற்கனவே முதல்நிலைச் சந்தையில் வெளியீடு செய்யப்பட்ட பத்திரங்கள் இங்கு வணிகம் செய்யப்படுகின்றன.
- ✓ பங்கு மாற்றகம் உடனடி மாற்றகம் ஆகிய இரண்டையும் உள்ளடக்கியுள்ளது.

2. மூலதனச் சந்தையின் ஏதேனும் இரண்டு பணிகளை விளக்குக.

சேமிப்பு மற்றும் மூலதன உருவாக்கம்

- ✓ மூலதனச்சந்தையில் பல்வேறு வகையான பத்திரங்கள் பல்வேறு துறையைச் சார்ந்து மக்களிடமிருந்து சேமிப்பை திரட்டுவதற்கு உதவி செய்கின்றது.
- ✓ பத்திரங்கள் முதலீடு செய்யும் மக்களுக்கு நிச்சயமான பங்கு மாற்றகத்தின் வருவாய் மற்றும் நீர்மைத் தன்மை கிடைக்கிறது.
- ✓ இது நாட்டில் மூலதன உருவாக்கத்தை தூண்டுகிறது.

நிலை மூலதனம்

- ✓ மூலதனச்சந்தை / பங்கு மாற்றகம் நிறுமங்கள் நிலை மூலதனத்தை திரட்டுவதற்கு உதவிபுரிகிறது.
- ✓ முதலீட்டாளர்கள் நிலையான காலத்திற்கு தங்களுடைய நிதிகளை வைத்திருக்க முடியாது.
- ✓ ஆனால் நிறுமங்களுக்கு நிதி நிலையாக தேவைப்படுகிறது.
- ✓ பங்கு மாற்றகம் முதலீட்டாளர்கள் தங்களுடைய பத்திரங்களை வாங்க அல்லது விற்க வாய்ப்பு அளிப்பதன் மூலமாக நிறுமத்தின் மூலதனம் நிலையாக இருக்க உதவி செய்கிறது.

3. தேசிய தீர்வக மற்றும் கள ஆசிய அமைப்பு – குறிப்பு வரைக.

- ✓ பங்கில்லா வணிக முறையின் கீழ் பத்திரங்களின் தீர்வுகள் அனைத்தும் பதிவேட்டின் முலமே நடைபெறுகிறது.
- ✓ **பங்கில்லா வணிக முறையின் மூன்று பகுதிகள் –**

(i) தேசிய வணிக ஒப்பீடு மற்றும் அறிக்கை முறையானது பத்திரச்சந்தையின் வரையறை மற்றும் கட்டளைகளை விளக்குகிறது.

(ii) தீர்வு தேதியன்று தரகர்களின் நிகரரொக்கம் மற்றும் பங்கு பொறுப்புகளை தேசிய அகற்றீட்டு முறை முடிவு செய்வதையே குறிக்கோளாக கொண்டுள்ளது.

- ✓ (iii) எந்த ஒரு பத்திரமும் மாற்றப்படாமல் மின்னணு முலம் பதிவுகள் செய்யப்பட்டு பங்கு உரிமையை மாற்றுவதையே தேசிய வைப்பு அமைப்பு செய்கிறது.

4. இந்திய மூலதனச் சந்தையின் தோற்றம் மற்றும் வளர்ச்சியை விவரி.

- ✓ 1947 முதல் 1973 வரையிலான காலத்தை மூலதன சந்தையின் கட்டமைப்புக்கான வளர்ச்சிக் காலம் என்று கூறலாம்.
- ✓ இக்கால கட்டத்தில் மேம்பாட்டு நிதி நிறுவனங்களான **IFCI, ICICI, IDBI, UTI, SFCs** மற்றும் SIDCs போன்றவை உருவாக்கப்பட்டன.
- ✓ இந்நிதி நிறுவனங்கள் மூலதன சந்தையை பலப்படுத்த மிகவும் உறுதுணையாக இருந்தன.
- ✓ 1980 லிருந்து 1992 வரை முதன்மைசந்தைக்கு தேவையான வளங்களான கடனீட்டுப்பத்திரம் மிகவும் சக்தி வாய்ந்த ஆவணமாக செயல்பட்டது.
- ✓ இக்கால கட்டத்தில் பல பங்குச் சந்தைகளும் உருவானது. இரண்டாம் சந்தையின் அபரிமிதமான வளர்ச்சி அடைந்தது.
- ✓ முதன்மைசந்தை மற்றும் இரண்டாம் சந்தையினை ஒழுங்குபடுத்தும் அமைப்பாக SEBI உருவானது, .

- ✓ இரண்டாம் சந்தையின் வேலைகளை மறு சீரமைப்பு மற்றும் மதிப்பீடு செய்து ஆலோசனை வழங்க பல குழுக்கள் உருவாக்கப்பட்டன.

5. ஏட்டுக்கடன் மற்றும் துணிகர முதல் வழங்கு நிறுமங்களைப் பற்றி விளக்குக.

ஏட்டுக் கடன் தரகு முகமை நிறுவனங்கள்

- ✓ விற்பனை மூலம் பெறவேண்டிய பெறுதல்களின் அடிப்படையில் நிதி நிறுவனங்கள் செய்யும் நிதி ஏற்பாடே ஏட்டுக்கடன் தரகு முகமை ஆகும்.
- ✓ ஏட்டுக்கடன் தரகு முகமை அதனுடைய வாடிக்கையாளர்களுக்காக ஏட்டுக்கடன்களை வசூலிக்கும்.
- ✓ உதாரணம் SBI, மற்றும் வணிகசேவைகள் SBI ன்துணை நிறுவனம்.

துணிகர முதல் வழங்கும் நிறுவனங்கள்–

- ✓ துணிகர மூலதன நிதி என்பது சாதாரண நிதியில் ஒரு பகுதி ஆகும்.
- ✓ இது புதிய திட்டம் மற்றும் கண்டுபிடிப்பிற்கு நிதி வழங்குவதற்காக உருவாக்கப்பட்டதாகும்.
- ✓ துணிகரமூலதனம் என்பது தொழில்நுட்ப திட்டங்களை வணிக மயமாக்குவதற்கு தேவையான நிதியினை அளிக்கிறது.

III பெரு வினாக்கள் –

1. மூலதனச் சந்தையின் சிறப்பியல்புகளை விவாதிக்க.

அ) பத்திரங்களின் சந்தை

பங்குகள், கடனுறுதிப்பத்திரங்கள் போன்ற பத்திரங்கள் மூலதனச்சந்தையில் கையாளப்படுவதால் இது பத்திரங்களின் சந்தை என அழைக்கப்படுகிறது.

ஆ) விலை

பத்திரங்களின் விலை மூலதனச் சந்தையில் பத்திரங்களின் தேவை மற்றும் அளிப்பை பொறுத்து தீர்மானிக்கப்படுகிறது.

இ) பங்கேற்பாளர்கள்

மூலதனச்சந்தையின் ஈடுபடுபவர்கள் தனிநபர்கள், நிறுமங்கள், அரசு வங்கிகள், மற்றும் இதர நிதி நிறுவனங்கள் போன்றவர்களை உள்ளடக்கியுள்ளது.

ஈ) இட அமைவு

மூலதனச் சந்தைக்கான இடம் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குட்பட்டதில்லை என்றாலும் பங்கு மாற்றகம் போன்ற நன்கு தெரிந்த இடமாக இருத்தல் வேண்டும்.

உ) நிதிசார்ந்த சொத்துக்களின் சந்தை

மூலதனச்சந்தை நீண்ட கால நிதி சார்ந்த சொத்துக்களுக்கான ஒரு மேடையை வழங்குகிறது.

2. நிதிச் சந்தையின் பல்வேறு வகைகளை விவரிக்க.

ஏட்டுக் கடன் தரகு முகமை நிறுவனங்கள்

- ✓ விற்பனை மூலம் பெறவேண்டிய பெறுதல்களின் அடிப்படையில் நிதி நிறுவனங்கள் செய்யும் நிதி ஏற்பாடே ஏட்டுக்கடன் தரகு முகமை ஆகும்.
- ✓ ஏட்டுக்கடன் தரகு முகமை அதனுடைய வாடிக்கையாளர்களுக்காக ஏட்டுக்கடன்களை வசூலிக்கும்.

- ✓ உதாரணம் SBI, மற்றும் வணிகசேவைகள் SBI ன்துணை நிறுவனம்.

துணிகர முதல் வழங்கும் நிறுவனங்கள்–

- ✓ துணிகர மூலதன நிதி என்பது சாதாரண நிதியில் ஒரு பகுதி ஆகும்.
- ✓ இது புதிய திட்டம் மற்றும் கண்டுபிடிப்பிற்கு நிதி வழங்குவதற்காக உருவாக்கப்பட்டதாகும்.
- ✓ துணிகரமூலதனம் என்பது தொழில்நுட்ப திட்டங்களை வணிக மயமாக்குவதற்கு தேவையான நிதியினை அளிக்கிறது.

பரஸ்பர நிதி –

- ✓ சிறு முதலீட்டாளர்களின் சேமிப்புகளை பெரிய முதலீடாகமாற்றும் நிதி நிறுவனங்களையே பரஸ்பர நிதி என்கிறோம்.
- ✓ அதிகபலன், நெகிழ்வு தன்மை, வரியிலிருந்து பாதுகாப்பு போன்ற நன்மைகள் பரஸ்பரநிதி முலம் முதலீட்டாளருக்கு கிடைக்கிறது.

இந்திய உடனடி பங்கு மாற்றகம் –

- ✓ **OTCEI** – இந்திய உடனடி பங்கு மாற்றகம்.
- ✓ பங்குகளை இந்தியா முழுவதும் மின்னணு மூலம் வியாபாரம் செய்யும் நோக்கத்தோடு நிதி நிறுவனங்களால் உருவாக்கப்பட்டதே **OTCEI** என்பதாகும்.

இந்திய தேசியப் பங்கு மாற்றகம் லிமிடெட்

- ✓ பங்குச் சந்தையின் மாதிரியாக NESI என்பது 1992 ம் ஆண்டு உருவாக்கப்பட்டது.
- ✓ இச்சந்தையின் நோக்கமானது மின்னணு பங்குகளை இந்தியா முழுவதும் அமைத்துக் கொடுப்பதாகும்.
- ✓ இந்நிறுவனம் திறமையான மற்றும் வெளிப்படைத்தன்மை கொண்ட பங்கு வியாபாரத்தையே எதிர்பார்க்கிறது.

3. **மூலதனச் சந்தையின் பல்வேறு பணிகளை விவரிக்க**

சேமிப்பு மற்றும் மூலதன உருவாக்கம்

- ✓ மூலதனச்சந்தையில் பல்வேறு வகையான பத்திரங்கள் பல்வேறு துறையைச் சார்ந்து மக்களிடமிருந்து சேமிப்பை திரட்டுவதற்கு உதவி செய்கின்றது.
- ✓ பத்திரங்கள் முதலீடு செய்யும் மக்களுக்கு நிச்சயமான பங்கு மாற்றகத்தின் வருவாய் மற்றும் நீர்மைத் தன்மை கிடைக்கிறது.
- ✓ இது நாட்டில் மூலதன உருவாக்கத்தை தூண்டுகிறது.

நிலை மூலதனம்

- ✓ மூலதனச்சந்தை / பங்கு மாற்றகம் நிறுமங்கள் நிலை மூலதனத்தை திரட்டுவதற்கு உதவிபுரிகிறது.
- ✓ முதலீட்டாளர்கள் நிலையான காலத்திற்கு தங்களுடைய நிதிகளை வைத்திருக்க முடியாது.
- ✓ ஆனால் நிறுமங்களுக்கு நிதி நிலையாக தேவைப்படுகிறது.
- ✓ பங்கு மாற்றகம் முதலீட்டாளர்கள் தங்களுடைய பத்திரங்களை வாங்க அல்லது விற்க வாய்ப்பு அளிப்பதன் மூலமாக நிறுமத்தின் மூலதனம் நிலையாக இருக்க உதவி செய்கிறது.

தொழிற்துறை வளர்ச்சி

- ✓ பொருளாதாரத்தின் தொழிற்துறைக்கு மூலவளங்களை மாற்றுவதன் மூலம் பங்கு மாற்றகம் ஒரு மைய சந்தையாக உள்ளது.
- ✓ இது போன்ற நிறுவனங்கள் உற்பத்தி வழிகளில் முதலீடு செய்ய மக்களை ஊக்குவிக்கின்றது.

- ✓ எனவே, இது நிறும பத்திரங்களில் முதலீட்டிற்கான நிதிகளை திரட்டுவதன் மூலம் தொழிற்துறை வளர்ச்சி மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கு வழி வகுக்கிறது.

உடனடி மற்றும் தொடர்ச்சியான சந்தை

- ✓ பங்கு மாற்றகம் வாங்குபவர்கள் மற்றும் விற்பவர்கள் பத்திரங்களை வாங்க மற்றும் விற்பதற்கு ஒரு வசதியான மையத்தை வழங்குகிறது.
- ✓ எளிய சந்தையிடுதல் பத்திரங்களில் முதலீடு செய்வதில் மற்ற சொத்துக்களுடன் ஒப்பிடும் பொழுது அதிகநீர்மைத் தன்மையைஉருவாக்குகிறது.

செயல் திறனுக்கு நம்பகமான வழிகாட்டி

- ✓ மூலதனச்சந்தை நிறுமங்களின் செயல்திறன் மற்றும் நிதி நிலைக்கு ஒரு நம்பகமான வழிகாட்டியாக சேவைபுரிகிறது.

நிதிகளின் உரிய திசையில் ஆற்றுப்படுத்தல்

- ✓ பத்திரங்களின் நடப்பு சந்தை விலை மற்றும் அதன் வருவாய், பொது மக்கள் தங்கள் நிதியை ஒரு குறிப்பிட்ட நிறுமத்தில் முதலீடு செய்ய வழிகாட்டும் காரணியாக உள்ளது.
- ✓ இது பொது நலனுக்காக நிதியை திறன்பட பயன்படுத்துவதை உறுதி செய்கிறது.

.

பின்தங்கிய பகுதிகளை மேம்படுத்துதல்

- ✓ மூலதனச்சந்தை பின்தங்கிய பகுதிகளின் திட்டங்களுக்கு நிதி உதவி வழங்குகிறது.
- ✓ இது பின்தங்கிய பகுதிகளின் பொருளாதார மேம்பாட்டிற்கு உதவி செய்கிறது.
- ✓ பின்தங்கிய மற்றும் கிராமப்புற பகுதிகளின் மேம்பாட்டு திட்டங்களுக்கு நீண்ட கால நிதியையும் வழங்குகிறது.

6. பணச் சந்தை

I. குறு வினாக்கள் –

1. பணச்சந்தை வரைவிலக்கணம் தருக.

- ✓ பல்வேறு அமைப்புகள் மற்றும் நிறுவனங்கள் பணத்திற்கு நிகரான பல்வேறு ஆவணங்களை கையாளும் மொத்த அமைப்பிற்கான கூட்டுப் பெயராகும். – குரோத்தர்.

2. வணிக இரசீது சந்தை என்றால் என்ன ?

- ✓ பொருட்களின் விற்பனையாளர்கள் மூலம் பொருட்களை வாங்குபவர்கள் மீது எழுதி தயாரிக்கப்படும் ஆவணம் வணிக இரசீது ஆகும்.
- ✓ வணிக இரசீதை வாங்கவும் விற்கவும் கூடிய ஒரு சந்தைக்கு " வணிக இரசீது சந்தை" என்று பெயர்.

3. வைப்புச் சான்றிதழ் சந்தை என்றால் என்ன ?

- ✓ வைப்பு சான்றிதழ் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களால் வழங்கப்படும் குறுகிய காலவைப்பு ஆவணங்களாகும்.
- ✓ வைப்பு சான்றிதழை வாங்கவும் விற்கவும் கூடிய ஒரு சந்தைக்கு " வைப்பு சான்றிதழ் சந்தை" என்று பெயர்.

4. அரசுப் பத்திரங்கள் சந்தை என்றால் என்ன ?

- ✓ அரசு அல்லது தங்க முனை பத்திரங்களை வாங்கவும் விற்கவும் கூடிய ஒரு சந்தைக்கு 'அரசு பத்திரங்கள் சந்தை' என்று பெயர்.

5. பணச்சந்தையில் பயன்படுத்தப்படும் ஆவணங்கள் யாவை ?

- ✓ கருவூல சீட்டுகள்
- ✓ குறுகிய கால அறிவிப்பு மற்றும் அழைப்பு பணம்
- ✓ வணிக இரசீதுகள்
- ✓ உறுதி மொழி பத்திரங்கள்
- ✓ ரெப்போ – மீள் வாங்கல் வீத ஆவணங்கள்

6. பழமையான இரண்டு பணச்சந்தைகளை விவரி.

- ✓ இலண்டன் பணச் சந்தை உலகின் பழமையான மிகவும் வளர்ந்த மற்றும் முன்னணி பணச்சந்தை ஆகும்.
- ✓ இரண்டாவது நன்கு வளர்ந்த பணச் சந்தையாக நியூயார்க் பணச் சந்தை உள்ளது

7. ஏலமிடுதல் என்பதன் பொருள் யாது ?

- ✓ வர்த்தகர்கள் ஒருவர் ஒருவரோடு போட்டியிடும் முறையில் பத்திரங்களை அதிகபட்ச விலைக்கு விற்க மேற்கொள்ளப்படும் ஒரு வர்த்தக முறையே'ஏலம் விடுதல்' ஆகும்.

8. மாறுதல் என்பதன் பொருள் யாது ?

- ✓ ஒரு பத்திரத்தை வாங்குவதற்காக மற்றொரு பத்திரத்தை விற்பனை செய்ய கொண்டு செல்லும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக இரண்டாம் நிலை சந்தையில் இந்திய ரிசர்வ்வங்கி மேற்கொண்ட அதன் திறந்த சந்தை செயல்பாடு 'மாறுதல்' ஆகும்.

II சிறு வினாக்கள் –

1. கருவுல இரசீதின் பொது இயல்புகள் யாவை ?

கருவூல இரசீதின் இயல்புகள் பின்வருமாறு

- ✓ வெளியிடுபவர்
- ✓ நிதி இரசீது
- ✓ நீர்மைத் தன்மை
- ✓ முக்கிய ஆதாரம்
- ✓ பண மேலாண்மை

2. பணச்சந்தையில் ஈடுபடும் பங்கேற்பாளர்கள் யாவர் ?

- ✓ அரசு பத்திர சந்தையில் அரசுத்துறை வைத்துள்ள வளங்களைப் பரிமாற்றம் செய்வதில் ஒருங்கிணைந்த பங்கேற்பாளர்களாக மத்திய அரசு மற்றும் மாநில அரசுகள்உள்ளன.

3. கருவுல இரசீதின் வகைகளை விவரி ?

- ✓ **91 நாட்கள் கருவூல ரசீதுகள்** – ஒரு நிலையான 4 சதவீததள்ளுபடி விகிதத்தில் ஏலத்தின்மூலம் வெளியிடப்படுகின்றன.

- ✓ **182 நாட்கள் கருவூல இரசீதுகள் –** ஒரு வாரம் முழுவதும் வடிகட்டும் அடிப்படையில் வெளியிடப்படுகிறது.
- ✓ **364 நாட்கள் கருவூல இரசீதுகள்** – எவ்வித நிலையான விகிதமும் கொண்டு செயல்படுவதில்லை.

4. வைப்புச் சான்றிதழின் இயல்புகளை விவரி ?

- ✓ கால வைப்புக்கான உரிமை ஆவணம் ஆகும்.
- ✓ பிணைய மற்ற மாற்றுமுறை ஆவணங்கள் ஆகும்.
- ✓ மேல் எழுதுதல் மூலம் எளிதில் மாற்றி வழங்கும் தன்மை உடையது.
- ✓ முகமதிப்பிலிருந்து வட்டத்தில் வெளியிடுதல்.
- ✓ சலுகை நாட்கள் இல்லாமல் குறிப்பிட்ட தேதியில் திரும்பச் செலுத்தக் கூடியது.

5. வணிக இரசீதின் வகைகளை விவரி .

தேவை மற்றும் பயன்பாட்டு இரசீதுகள்

- ✓ தேவை இரசீது என்பது பணம் செலுத்துவதற்கான தேதி எதுவும் குறிப்பிடப்படாத இரசீது ஆகும்.
- ✓ தேவை இரசீதை வைத்திருப்பவர் தனக்கு எப்பொழுது பணம் தேவைப்படுகிறதோ அப்போது அந்த இரசீதுக்கு பணம் பெற்றுக் கொள்ளலாம்.

தூய்மை இரசீதுகள் மற்றும் ஆவண இரசீதுகள்

- ✓ பொருட்களின் உரிமை ஆவணம் மூலம் இணைக்கப்பட்ட இரசீதுகள் ஆவண இரசீதுகள் என்று அழைக்கப்படுகிறது.
- ✓ எந்த ஒரு ஆவணமும் எழுதி இணைக்கப்படாத இரசீதுகள் தூய்மை இரசீதுகள்ஆகும்.
- ✓ உதாரணம் – தொடர்வண்டி இரசீது மற்றும் சரக்குந்கு இரசீது.

உள்நாடு மற்றும் அயல்நாட்டு இரசீதுகள்

- ✓ இந்தியாவில் குடியிருக்கும் ஒரு நபருக்கு இந்தியாவில் எழுதப்பட்ட மற்றும் செலுத்த வேண்டிய இரசீதுகள் உள்நாட்டு இரசீதுகள் ஆகும்.
- ✓ அயல்நாட்டு இரசீதுகள் என்பது இந்தியாவிற்கு வெளியே எழுதப்பட்டு இந்தியாவிலோ அல்லது வெளிநாட்டிலோ செலுத்தப்படும் இரசீதுகளை அயல்நாட்டு இரசீதுகள் எனலாம்.

தனித்துவமான இரசீதுகள்

- ✓ தனித்துவமான இரசீதுகள் என்பது வரைதல் மற்றும் ஏற்றுக் கொள்ளல் உள்ளூர் வழக்கப்படி அல்லது வர்த்தகப் பயன்பாட்டின் மூலம் நிர்வகிக்கப்படுவதைக் குறிக்கிறது.

இருப்பிட மற்றும் வழங்கல் இரசீதுகள்

- ✓ இருப்பிட மற்றும் வழங்கல் இரசீதுகள் என்பது உண்மையான வியாபார நடவடிக்கைகள் அல்லாமல் உருவாக்கப்படும் இரசீதுகளை இருப்பிட மற்றும் வழங்கல் இரசீதுகள் எனலாம்.

III பெரு வினாக்கள் –

1. பணச்சந்தை மற்றும் மூலதனச்சந்தை வரைவிலக்கணம் தருக. இவை இரண்டிற்கும் இடையிலான வேறுபாடுகளைத் தருக.

பணச்சந்தை – பல்வேறு அமைப்புகள் மற்றும் நிறுவனங்கள் பணத்திற்கு நிகரான பல்வேறு ஆவணங்களை கையாளும் மொத்த அமைப்பிற்கான கூட்டுப் பெயராகும்.

– குரோத்தர்.

www.Padasalai.Net www.TrbTnpsc.com

மூலதனச்சந்தை – மூலதனச் சந்தை என்பது பல்வேறு வகையான மூலதன ஆதாயங்களின் தேவை மற்றும் அளிப்பிற்கு இடையே தோற்றுவிக்கப்பட்ட இணைப்புகளுடன் நிறுவன முதலீடுகள் மற்றும் செயல்பாடுகளின் ஒரு கலவையே.

– கே. தத்தா

தன்மைகள்	பணச்சந்தை	மூலதனச் சந்தை
நிதியின் காலம்	ஒரு வருடத்திற்கும் மிகாமல் நடக்கும் குறுகிய கால சந்தை	ஒரு வருடத்திற்கும் மேலாக நடக்கும் நீண்ட கால சந்தை
வணிக ஆவணங்கள்	மாற்றுமுறை ஆவணங்கள் , கருவுலகச் சீட்டுகள் , வணிகத்தாள்	பங்குகள் , கடனீட்டுப் பத்திரங்கள் , அரசு பத்திரங்கள்
ஆவணங்கள் கிடைக்கும் இடம்	பொதுவாக இரண்டாம் நிலைச்சந்தையில் இடம் பெறாது	இரண்டாம் நிலைச் சந்தையில் இடம் பெறும்.
உட்பிரிவு	உட்பிரிவு எதும் இல்லை	முதல் நிலைச் சந்தை மற்றும் இரண்டாம் நிலைச் சந்தை என இரு பிரிவுகள் உள்ளன.
பரிவர்த்தனை நடைபெறும் இடம்	முறையான இடம் ஏதும் இல்லாமல் தொலைபேசி வழியாக பரிவர்த்தனை நடைபெறும்.	முறையான இடத்தில் பரிவர்த்தனை நடைபெறும்.
இடர் அளவு	கடன் மற்றும் சந்தை ஆபத்து குறைந்தளவு உள்ளது.	கடன் மற்றும் சந்தை ஆபத்து அதிகளவு உள்ளது.
நீர்மைத்தன்மை	நீர்மைத்தன்மை உள்ளது	குறைந்தளவு நீர்மைத்தன்மை கொண்டது.
ஆதிக்க நிறுவனங்கள்	வணிக வங்கிகள்	வங்கி அல்லாத நிதி நிறுவனங்கள் மற்றும் தனிச் சிறப்பு நிதி நிறுவனங்கள்

2. **பணச்சந்தையின் சிறப்பியல்புகளை விவரி.**

குறுகிய கால நிதிகள்

✓ குறுகிய காலநிதிகள் அல்லது பணத்திற்கு நிகரான நிதி சொத்துக்களுக்கான முற்றிலுமான ஒரு சந்தை இதுவாகும்.

முதிர்வு காலம்

✓ இச்சந்தையில் ஒரு வருடத்திற்கு குறைவான முதிர்வு காலம் கொண்டநிதி சொத்துக்களை மட்டுமே பயன்படுத்தப்படுகிறது.

பணமாக மாற்றுவது

✓ உடனடியாக பணமாக மாற்றியமைக்கக் கூடிய நிதிச் சொத்துக்களை மட்டுமே இச்சந்தையில் இழப்பு இல்லாமல் குறைந்தபட்ச பரிவர்த்தனை செலவில் பரிமாற்றம் செய்யப்படுகிறது.

முறையான இடமில்லை

✓ பொதுவாக பரிவர்த்தனைகள் தொலைபேசி அதாவது வாய்மொழி தொடர்பு மூலமாக நடைபெறுகின்றன.

✓ சம்பந்தப்பட்டஆவணங்கள்மற்றும் எழுதப்பட்ட தகவல் தொடர்புகள் பின்னர் பரிமாறிக் கொள்ளலாம்.

- ✓ மூலதனச்சந்தையில் உள்ளது போல் பங்குச் சந்தையில் ஒரு முறையான இடமில்லை.

துணை சந்தைகள்

- ✓ இது ஒரு ஒற்றைத் தன்மையுள்ள சந்தை அல்ல.
- ✓ இது தனித்தனி சிறப்புடைய பல துணைச் சந்தைகளின் தொகுப்பாகும்.
- ✓ எ.கா: அழைப்பு பணச்சந்தை, ஏற்புச்சந்தை மற்றும் மாற்றுமுறை ஆவண சந்தைகள்.

சந்தையின் பங்கு

- ✓ மத்திய வங்கி, வணிகவங்கிகள், வங்கிகள் அல்லாத நிதி நிறுவனங்கள், தள்ளுபடியகம் மற்றும் ஏற்பகங்கள்,

3. பணச்சந்தையின் ஆவணங்களை விவரி.

கருவூல இரசீதுகள்

- ✓ அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட கருவூல இரசீதுகள் தற்போது மிகவும் பிரபலமாக உள்ள வணிக மற்றும் அதிகளவு நீர்மைத்தன்மை கொண்ட ஆவணங்களாகும்.
- ✓ கருவூல இரசீதுகள் என்பது குறிப்பிட்ட காலக்கெடுவுடன் கூடிய கடன் உறுதி பத்திரமாகும்.
- ✓ இதன் காலம் ஒரு வருடத்திற்கு மேல் இருக்காது.

வகைகள் –

- ✓ **91 நாட்கள் கருவூல ரசீதுகள்** – ஒரு நிலையான 4 சதவீததள்ளுபடி விகிதத்தில் ஏலத்தின்மூலம் வெளியிடப்படுகின்றன.
- ✓ **182 நாட்கள் கருவூல இரசீதுகள் –** ஒரு வாரம் முழுவதும் வடிகட்டும் அடிப்படையில் வெளியிடப்படுகிறது.
- ✓ **364 நாட்கள் கருவூல இரசீதுகள்** – எவ்வித நிலையான விகிதமும் கொண்டு செயல்படுவதில்லை.

வைப்புச் சான்றிதழ்கள் –

- ✓ வைப்பு சான்றிதழ் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களால் வழங்கப்படும் குறுகிய காலவைப்பு ஆவணங்களாகும்.
- ✓ வங்கிகளும் நிதி நிறுவனங்களும் தங்களது நிதி ஆதாரங்களை உயர்த்திக் கொள்வதற்காக வெளியிடுகின்றன.
- ✓ வைப்புச் சான்றிதழ் கடன் உறுதிப் பத்திர வடிவத்தில் வழங்கப்படுகிறது.
- ✓ எளிதில் மாற்றக் கூடிய இயல்புடையதாகவும் விரைவாக சந்தைப்படுத்தக் கூடியதாகவும் உள்ளது.
- ✓ வைப்புச் சான்றிதழ்கள் ஒரு நபரிடம் இருந்து மற்றொரு நபருக்கு மாற்றக்கூடிய தன்மையுடையது.
- ✓ மாற்றக்கூடிய தன்மைஉடையதால் இது மாற்றுமுறை ஆவண வைப்புச்சான்றிதழ் என்றும் அழைக்கப்படுகிறது.

வணிக இரசீதுகள் –

- ✓ பொருட்களின் விற்பனையாளர்கள் மூலம் பொருட்களை வாங்குபவர் மீது எழுதி தயாரிக்கப்படும் ஒரு ஆவணமே வணிகஇரசீது ஆகும்.
- ✓ இந்த வணிக இரசீது சுய நீர்மைதன்மை இயல்பு, இரு நபர்களுக்கிடையிலான பரிமாற்றம், நடவடிக்கையின் சரியான தேதியை தெரிந்து கொள்ளும் தன்மை, நடவடிக்கை குறித்த வெளிப்படைத் தன்மை போன்ற நன்மைகளைக் கொண்டது.

4. வணிக இரசீதின் இயல்புகள் மற்றும் வகைகளை விவரி.

வணிக இரசீதின் இயல்புகள் –

- ✓ வரைவாளர்
- ✓ ஏற்றுக்கொள்பவர்
- ✓ செலுத்தப்பெறுநர்
- ✓ வட்டம் செய்பவர்
- ✓ மேல் எழுதுபவர்
- ✓ மதிப்பீடு
- ✓ முதிர்வு
- ✓ கடன்தரமதிப்பீடு

வணிக இரசீதின் வகைகள் –

தேவை மற்றும் பயன்பாட்டு இரசீதுகள்

- ✓ தேவை இரசீது என்பது பணம் செலுத்துவதற்கான தேதி எதுவும் குறிப்பிடப்படாத இரசீது ஆகும்.
- ✓ தேவை இரசீதை வைத்திருப்பவர் தனக்கு எப்பொழுது பணம் தேவைப்படுகிறதோ அப்போது அந்த இரசீதுக்கு பணம் பெற்றுக் கொள்ளலாம்.

தூய்மை இரசீதுகள் மற்றும் ஆவண இரசீதுகள்

- ✓ பொருட்களின் உரிமை ஆவணம் மூலம் இணைக்கப்பட்ட இரசீதுகள் ஆவண இரசீதுகள் என்று அழைக்கப்படுகிறது.
- ✓ எந்த ஒரு ஆவணமும் எழுதி இணைக்கப்படாத இரசீதுகள் தூய்மை இரசீதுகள்ஆகும்.
- ✓ உதாரணம் – தொடர்வண்டி இரசீது மற்றும் சரக்குந்கு இரசீது.

உள்நாடு மற்றும் அயல்நாட்டு இரசீதுகள்

- ✓ இந்தியாவில் குடியிருக்கும் ஒரு நபருக்கு இந்தியாவில் எழுதப்பட்ட மற்றும் செலுத்த வேண்டிய இரசீதுகள் உள்நாட்டு இரசீதுகள் ஆகும்.
- ✓ அயல்நாட்டு இரசீதுகள் என்பது இந்தியாவிற்கு வெளியே எழுதப்பட்டு இந்தியாவிலோ அல்லது வெளிநாட்டிலோ செலுத்தப்படும் இரசீதுகளை அயல்நாட்டு இரசீதுகள் எனலாம்.

தனித்துவமான இரசீதுகள்

- ✓ தனித்துவமான இரசீதுகள் என்பது வரைதல் மற்றும் ஏற்றுக் கொள்ளல் உள்ளூர் வழக்கப்படி அல்லது வர்த்தகப் பயன்பாட்டின் மூலம் நிர்வகிக்கப்படுவதைக் குறிக்கிறது.

இருப்பிட மற்றும் வழங்கல் இரசீதுகள்

- ✓ இருப்பிட மற்றும் வழங்கல் இரசீதுகள் என்பது உண்மையான வியாபார நடவடிக்கைகள் அல்லாமல் உருவாக்கப்படும் இரசீதுகளை இருப்பிட மற்றும் வழங்கல் இரசீதுகள் எனலாம்.

5. அரசுப் பத்திரங்களின் இயல்புகளை விவரி.

முகமைகள் –

- ✓ மத்திய அரசு, மாநில அரசுகள், அரசாங்க அமைப்புக்கு இணையான அமைப்புகள் போன்றவை மூலம் அரசு பத்திரங்கள் வெளியிடப்படுகின்றன.

இந்திய ரிசர்வ் வங்கியின் சிறப்பு பணி –

- ✓ இந்திய ரிசர்வ் வங்கி அரசு பத்திரங்கள் வாங்குதல் மற்றும் விற்பனை செய்வதில் முக்கிய பங்காற்றுகிறது.
- ✓ குறிப்பாக பண மேலாண்மையில் சிறப்பாக செயல்படுகிறது.

பத்திரங்களின் இயல்பு –

- ✓ அரசு பத்திரங்கள் உத்தரவாதமாக வட்டி வழங்குவதால் அதில் முதலீடு செய்வது பாதுகாப்பானதாகவும் மேலும் அரசே முதன்மை தொகையை திரும்ப செலுத்துவதால் முற்றிலும் பாதுகாப்பு தன்மை கொண்டதாகவும் இருக்கிறது.

பணப் புழக்க விபரம் –

- ✓ தங்க முனை பத்திரங்கள் பலவகை நீர்மை தன்மை கொண்டவை.
- ✓ அதன்படி மத்திய அரசால் வழங்கப்பட்ட பத்திரங்கள் அதிக நீர்மைதன்மை கொண்டதால் அதன் பணப்புழக்கமும் அதிகமாக இருக்கும்.

வரிவிலக்கு –

- ✓ முதலீட்டாளர்களுக்கு பரந்த அளவில் வரிவிலக்கு அளிப்பது இந்த அரசு பத்திரங்களின் முக்கிய அம்சமாக விளங்குகின்றது.
- ✓ இந்த பத்திரங்கள் இந்த நன்மைக்காகவே மிகவும் பிரபலமானதாக உள்ளது.

ஏலமிடுதல் –

- ✓ வர்த்தகர்கள் ஒருவர் ஒருவரோடு போட்டியிடும் முறையில் பத்திரங்களை அதிகபட்ச விலைக்கு விற்க மேற்கொள்ளப்படும் ஒரு வர்த்தக முறையே 'ஏலம் விடுதல்' ஆகும்.

மாறுதல் –

- ✓ ஒரு பத்திரத்தை வாங்குவதற்காக மற்றொரு பத்திரத்தை விற்பனை செய்ய கொண்டு செல்லும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக இரண்டாம் நிலை சந்தையில் இந்திய ரிசர்வ்வங்கி மேற்கொண்ட அதன் திறந்த சந்தை செயல்பாடு 'மாறுதல்' ஆகும்.

PREPARED BY

G. PRAKASH. M.COM. M.PHIL. B.ED. D.TED

GUGAI HR.SEC.SCHOOL. SALEM 6

9488270034

www.Padasalai.Net www.TrbTnpsc.com

7. பங்கு மாற்றகம்

I.. குறு வினாக்கள் –

1. பங்குச் சந்தை என்றால் என்ன ?

✓ பங்குச் சந்தை என்பது தொழில்துறை மற்றும் நிதியப் பாதுகாப்பின் கொள்முதல் மற்றும் விற்பனைக்கான ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட சந்தை ஆகும்.

2. பங்குச் சந்தை வரைவிலக்கணம் தருக.

✓ "பங்குச் சந்தை மாற்றங்கள் தனிப்பட்ட முறையில் ஒழுங்கமைக்கப்பட்ட சந்தைகள் பத்திரங்களில் வர்த்தகத்தை எளிதாக்கும்" – ஹஸ்பண்ட் மற்றும் டோகேர்ரி.

3. இந்தியாவில் உள்ள ஏதேனும் 5 பங்குகளை பற்றி எழுதுக.

✓ தி பாம்பே பங்குச்சந்தை
✓ அகமதாபாத் பங்குச் சந்தை சங்கம் லிமிடெட்
✓ பெங்களூரு பங்கு சந்தை லிமிடெட்
✓ புவனேஷ்வர் பங்குச் சந்தை.
✓ கல்கத்தா பங்கு பரிவர்த்தனை சங்கம் லிமிடெட்.
✓ கொச்சி பங்கு பரிவர்த்தனை லிமிடெட்
✓ தில்லி பங்குச் சந்தைசங்கம் லிமிடெட்
✓ குவாஹாட்டி பங்கு பரிவர்த்தனை லிமிடெட்

4. துணைத் தரகர் என்றால் என்ன ?

✓ இவர் பங்கு மாற்றகத்தின் உறுப்பினரின் முகவராகச் செயல்படுவார்.
✓ தன்னை அமர்த்திய உறுப்பினருக்கு வியாபாரத்தைப் பெற்றுத் தந்து அதற்காகக் கழிவு பெறுவார்.

5. தரகர் என்று யாரை அழைக்கப்படுகிறார்கள் ?

✓ தரகர்கள் தனக்காகப் பத்திரங்களை வாங்கி விற்பதில்லை.
✓ தரகர்கள் பத்திரங்களை வாங்குபவர்களையும் விற்பனை செய்கின்ற தன் வணிகர்களையும் ஒன்றாக இணைத்து பேரம் முடிவடைய உதவுகின்றனர்.
✓ இதற்காக இரு தரப்பினரிடமிருந்தும் கழிவு பெறுவர்.
✓ தரகர்கள், கழிவு முகவர்

6. ஊக வணிகர்களின் வகைகள் யாவை ?

✓ காளை
✓ கரடி
✓ கலைமான்
✓ முடவாத்து

7. பண்டமாற்று பரிவர்த்தனை என்றால் என்ன ?

✓ ஒரு பண்டமாற்று பரிமாற்றம் என்பது பண்டங்கள் வர்த்தகம் செய்யப்படும் இடத்தில் செய்யப்படும் பரிமாற்றம் ஆகும்

- ✓ உ.தா. கச்சா எண்ணெய் , இயற்கை எரிவாயு.

8. பங்குச் சந்தையின் சமீபத்திய வளர்ச்சி குறித்து குறிப்பிடுக.

- ✓ தாராளமயமாக்கல் செயல்முறை காரணமாக இந்தியாவில் பங்குச் சந்தை கட்டமைப்பின் பரந்த மாற்றத்திற்கு உட்பட்டுள்ளது.
- ✓ இந்திய பங்குச் சந்தையின் தற்போதைய கட்டமைப்பில் பல புதிய கட்டமைப்புகள் சேர்க்கப்பட்டுள்ளன.

9. இந்தியாவில் பங்கு வணிக நேரம் என்றால் என்ன ?

- ✓ பங்கு பரிமாற்றம் செய்ய அனுமதிக்கப்படும் நேரம் பங்கு வணிக நேரம் ஆகும்.
- ✓ இந்தியாவில் பங்குச் சந்தைகள் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் மூடப்படும்.
- ✓ தேசிய விடுமுறை நாட்களிலும் பங்குச்சந்தைகள் மூடப்படும்.
- ✓ சாதாரண பங்குகளுக்கான வர்த்தக நேரமாக காலை 9.15 மணி முதல் பிற்பகல் 3.30 வரைஇருக்கும்.
- ✓ பொருட்கள் சந்தைக்கான வர்த்தக நேரம் காலை 10 முதல் 11.30 வரை திங்கள் முதல் வெள்ளி வரை.
- ✓ விவசாய பொருட்களுக்கான சந்தை திங்கள் முதல் வெள்ளி வரை காலை 10 மணி முதல் 5 மணி வரை.
- ✓ வணிக நேரத்தின் போது உணவு இடைவேளையோ அல்லது தேநீர் இடைவேளையோ இல்லை.

10. தலால் தெரு – விளக்குக.

- ✓ தலால் தெரு என்பது இந்தியாவில் மும்பையின் மையப்பகுதியில் உள்ள தெருவாகும்.
- ✓ இங்கு இந்தியாவின் புகழ்பெற்ற பெரிய பங்குச் சந்தையான பம்பாய் பங்குச் சந்தை மற்றும் மதிப்பு மிக்க நிதி நிறுவனங்களும் உள்ளன.
- ✓ 1874 ஆம் ஆண்டு இந்ததெருவிற்கு பம்பாய் பங்குச் சந்தை இடம் பெயர்ந்த பிறகே இப் பெயர் ஏற்பட்டது.
- ✓ இதுவே இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட முதல் பங்குச் சந்தையாகும்.

II. சிறு வினாக்கள் –

1. பங்குச் சந்தையின் குறைபாடுகளை விவரி ?

- ✓ பங்கு பரிவர்த்தனையின் சீரான மற்றும் கட்டுப்பாடு இல்லாதது.
- ✓ பங்குச் சந்தைகளின் உறுப்பினர் மீது கட்டுப்பாடு இல்லாதது.
- ✓ ஆரோக்கியமற்ற ஊகத்தை கட்டுப்படுத்துவதில் தோல்வி.
- ✓ ஒரு இடத்தில் ஒன்றுக்கும் மேற்பட்டகட்டணம் வசூலிக்க அனுமதிக்கிறது.
- ✓ பங்கு மாற்றகங்களில் பங்குகளை பட்டியலிட சரியான ஒழுங்குமுறைகள் இல்லை.

2. காளை மற்றும் கரடி விளக்குக.

காளை ;–

- ✓ பத்திரங்கள் எதிர்காலத்தில் விலையேற்றம் பெறும் என்று எதிர்பார்க்கின்ற ஊகவணிகர் காளை என்றழைக்கப்படுவர்.
- ✓ இவ்வகை ஊகவணிகர் தெஜிவாலா என்றும் அழைக்கப்படுவர்.

- ✓ இவர்கள் எதிர்காலத்தில் அதிக விலையில் பத்திரங்களை விற்க இயலும் என்ற எண்ணத்தில் தற்போது பத்திரங்களை வாங்குகின்றனர்.
- ✓ ஒரு காளை தன்னுடைய கொம்புகளால் எதிரிகளை மேல் நோக்கி தூக்கி எறிவது போல இந்த வகை ஊகவணிகர்கள் பிணையப் பத்திரங்களின் விலையை உயரச் செய்யும் நோக்கோடு செயல்படுவர்.
- ✓ இவர்கள் எல்லாம் நன்மைக்கே நடைபெறும் என்ற மனப்பாங்கு கொண்டவர்கள்.

கரடி ;–

- ✓ எதிர்காலத்தில் குறிப்பிட்ட பத்திரங்களின் விலைகள் வீழ்ச்சி அடையும் என்று எண்ணம் கொண் ஊக வணிகர் கரடி அல்லது மண்டிவாலா ஆவர்.
- ✓ இவ்வகை ஊகவணிகர், பங்குகளைப் பின்னர் குறைந்த விலையில் வாங்க முடியும் என்ற எண்ணத்தில் தான் வைத்திருக்கும் பங்குகளைத் தற்போது அதிக விலையில் விற்பனை செய்வர்.
- ✓ ஒரு கரடி, பொதுவாகத் தன்னுடைய எதிரியைத் தரையில் தள்ளி அழுத்துகிறது.
- ✓ அதே போல ஒரு கரடி ஊகவணிகரும், பங்குச் சந்தையில் பங்குகளின் விலையைக் கீழே தள்ளுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளில் ஈடுபடுவர்.
- ✓ ஒரு கரடி ஊகவணிகர் எதிலும் பின்னோக்கிய மனப்பாங்கு கொண்டவர்.

3. மான் மற்றும் முடவாத்து – விளக்குக.

கலைமான் –

- ✓ முன்னெச்சரிக்கை உடைய ஊக வணிகர் கலைமான் ஆவர்.
- ✓ இவர் ஒரு நிறுமத்தின் பங்குகள் முனைமத்தில் விற்கப்படும் என்று அறிந்தவுடன், புதிய விடுப்புகளில் பங்கு வேண்டி விண்ணப்பம் செய்வார்.
- ✓ தனக்கு பங்குகள் ஒதுக்கப்பட்டால் அவற்றை முனைமம் பெற்றுக் கொண்டு விற்று விடுவார்.
- ✓ இவர் 'முனைம வேட்டையாளர்' என்று அழைக்கப்படுகிறார்.

கரடி –

- ✓ தம் நடவடிக்கைகளில் உள்ள இடர்பாடுகளைத் தீர்ப்பதில் போராடிக் கொண்டிருக்கின்ற ஒரு கரடி ஊக வணிகரே முட வாத்து ஆவார்.
- ✓ கரடி ஊகவணிகர் பின்னர் கொடுப்பதற்காகத் தற்போது பத்திரங்களை விற்பார்.
- ✓ குறிப்பிட்ட நாளில் பங்குகளை வைத்துள்ள எவரும் அதை விற்க விரும்பாததால் எந்த விலையிலும் வாங்குவதற்கு எந்த ஒரு பங்கும் கிடைக்காமல் மூலையில் முடக்கப்பட்ட நிலையில் இருப்பார்.
- ✓ மேலும் பங்குகளை இவரிடமிருந்து வாங்குவதற்கு ஒப்பந்தம் செய்தவரும் ஒப்பந்தத்தின் தீர்வைத் தள்ளி வைக்க விரும்பாததால் இவ்வகை ஊகவணிகர் போராட வேண்டியதாகிறது

4. தேசிய பங்குச் சந்தை முறை பற்றி விளக்குக.

- ✓ தேசிய பங்குச் சந்தைஅமைப்பு "ஸ்ரீ.எம்.ஜே.பெர்வானி தலைமையில் உயர் அதிகாரம் கொண்ட அமைப்பினால் ஏற்படுத்தப்பட்டது.

இந்தியாவில் உள்ள தேசிய பங்குச் சந்தைகள்

1. இந்தியாவின் தேசிய பங்கு சந்தை
2. இந்திய பங்கு வைப்பு குழு லிமிடெட்
3. தேசிய தீர்வை மற்றும் வைப்பு முறை
4. இந்திய பங்கு பத்திரங்கள் விற்பனை கழகம்

5. **தேசிய பங்குச் சந்தை விளக்குக**

- ✓ தேசிய பங்குச் சந்தை நவம்பர் 1992 ல் அமைக்கப்பட்டது.
- ✓ தேசிய அளவில் திரை சார்ந்து இணைய வழியாக ஆணை பெறும் வியாபார அமைப்பாகும்.
- ✓ இந்த அமைப்பு செயற்கை கோள் இணைப்பு மூலம் நாடு முழுவதும் பரவியுள்ள உறுப்பினர்களிடையே வியாபாரம் செய்கிறது.
- ✓ தேசிய பங்குச் சந்தையில் கடன் பிரிவு மற்றும் மூலதன பிரிவு என இரு பிரிவுள்ளது.

III பெரு வினாக்கள் –

1. **ஏதேனும் ஐந்து பங்குச் சந்தை பணிகளை விவரி ?**

உடனடி மற்றும் தொடர்ச்சியான சந்தை

- ✓ பங்கு பரிவர்த்தனை ஏற்கனவே இருக்கும் பத்திரங்களுக்கான ஒரு சந்தை.
- ✓ ஒரு முதலீட்டாளர் தனது பத்திரங்களை விற்க விரும்பினால், எளிதில் விரைவாக பங்குச் சந்தைகளில் அவற்றை விற்பனைச் செய்யலாம்.
- ✓ எளிதில் தனது பங்குகளை பணமாகவும் பணத்தை பங்குகளாகவும் மாற்ற இயலும்.
- ✓ பத்திரங்களின் இந்த எளிமையான விற்பனைத் திறன் அவர்களின் பணப்புழக்கத்தை அதிகரிக்கிறது
- ✓ இதன் விளைவாக அவர்களுடைய மதிப்பும் அதிகரிக்கிறது.

பத்திரங்கள் சரியான மதிப்பீடு

- ✓ பத்திரங்கள் வாங்குதல் மற்றும் விற்பனை செய்யப்படும் விலைகள் பதிவு செய்யப்பட்டு பொது மக்களுக்கு வழங்கப்படுகின்றன.
- ✓ இந்த விலைகள் "சந்தைமேற்கோள்கள்" என்று அழைக்கப்படுகின்றன.
- ✓ இந்த மேற்கோள்களின் அடிப்படையில் ஒருவர் பத்திரங்களின் மதிப்பை எளிதாக மதிப்பீடு செய்யலாம்.
- ✓ கடனளிப்பவர் கடனாக வழங்கப்படும் பாதுகாப்பு மதிப்பை எளிதில் மதிப்பீடு செய்யலாம்.

முதலீட்டாளர்களுக்கு பாதுகாப்பு

- ✓ ஒரு பங்கு பரிவர்த்தனையில் அனைத்து ஒப்பந்தங்களும் நன்கு வரையறுக்கப்பட்ட விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகளுக்கு ஏற்ப உள்ளன
- ✓ உதாரணமாக, தங்கள் சேவைகளுக்கான அதிகமான கமிஷன்களை புரோக்கர்கள் வசூலிக்க முடியாது.
- ✓ எந்த தவறான பாதிப்பும் கடுமையாக தண்டிக்கப்படும்.
- ✓ இதனால் பங்குச் சந்தை பரிவர்த்தனைகளின் கொள்முதல் மற்றும் விற்பனையில் நியாயமான அளவீடு மற்றும் நியாயமான நடவடிக்கைகளைவழங்குகிறது.

மூலதனதனத்தை சரியான முறையில் வழிப்படுத்துதல்

- ✓ மக்கள் நல்ல லாபத்தை ஈட்டக்கூடிய நிறுவனங்களின் பங்குகளில் முதலீடு செய்ய விரும்புவர்.
- ✓ தனிநபர்களின் சேமிப்பு ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் நல்ல லாபத்தை அறிவிக்கும் நிறுவனங்களுக்கு உறுதியளிக்கிறது.
- ✓ ஆனால் பங்குச் சந்தைகளுக்கு, இந்த சேமிப்புக்கள் இலாபமற்ற அலகுகள் பங்குகள் மீது வீணடிக்கப்படக்கூடும்.

மூலதன உருவாக்கத்திற்கான உதவி

- ✓ பங்குச் சந்தை பரிமாற்றம் பல்வேறு தொழில்துறை பத்திரங்கள் மற்றும் அவற்றின் விலைகள் மற்றும் அவர்களின் கொள்முதல் மற்றும் விற்பனைக்கு வழங்கிய வசதிகள் ஆகியவற்றைமக்களுக்கு சேமித்து, முதலீடு செய்ய தூண்டுகிறது.
- ✓ பங்கு பரிமாற்றங்கள், ஒரு நிலையான மூலதனத்தை தொழில்துறையில் உறுதிப்படுத்துவதோடு தொழில்துறை வளர்ச்சிக்கும் உதவுகிறது.

ஊக வணிகத்திற்கான வசதிகள்

- ✓ ஊகவணிகம் என்பது பங்கு பரிவர்த்தனை நடவடிக்கைகளின் ஒருங்கிணைந்த பகுதியாகும்.
- ✓ ஊகவணிகத்தின் விளைவாக, பத்திரங்களின் தேவை மற்றும் வழங்கல் சமமாகிறது.

2. ஏதேனும் ஐந்து பங்குச் சந்தை தன்மைகளை விவரி ?

பத்திரங்களுக்கான சந்தை

- ✓ பங்கு பரிவர்த்தனை என்பது ஒரு சந்தை, இது பெருநிறுவனங்கள், அரசு மற்றும் அரசுக்கு இணையான நிறுவனங்கள் ஆகியவற்றின் பத்திரங்கள் வாங்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன.

மறுவிற்பனை பத்திரங்களுக்கான சந்தை

- ✓ நிறுவனங்களால் ஏற்கனவே வெளியிடப்பட்ட பங்குகள், கடனீட்டு பத்திரங்கள் மற்றும் பத்திரங்கள் விற்பனையில் இது ஈடுபடுகிறது.
- ✓ ஏற்கனவே வெளியிடப்பட்ட அல்லது மறுவிற்பனை பத்திரங்களைக் கையாளுகிறது.
- ✓ இது இரண்டாம் நிலைசந்தை என்று அழைக்கப்படுகிறது.

பத்திர வர்த்தகத்தை ஒழுங்குபடுத்துதல்

- ✓ பங்கு மாற்றகம் அதன் சொந்தகணக்கில் எந்தப் பத்திரங்களையும் வாங்குவதோ விற்பதோ இல்லை.
- ✓ பத்திர வர்த்தகத்தில் ஈடுபட்டிருக்கும் பங்கு மாற்றக உறுப்பினர்கள் மற்றும் தரகர்கள் ஆகியோர் பத்திரங்களை வர்த்தகம் செய்வதற்கு தேவையான உள்கட்டமைப்பு மற்றும் வசதிகளை வழங்குகிறது.

தனிநபர்களின் அமைப்பு

- ✓ ஒரு பங்குச் மாற்றகம் என்பது தனிநபர்களின் அல்லது குழுக்களின் பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்படாத அமைப்பாக இருக்கலாம்.

மத்திய அரசின் அங்கீகாரம்

- ✓ பங்குச் மாற்றகம் என்பது ஒழுங்கு முறைப்படுத்தப்பட்ட சந்தையாகும்.
- ✓ அரசின் அங்கீகாரம் இதற்கு தேவைப்படுகிறது.

3. பங்குச் சந்தையின் பயன்களை விவரி ?

சமுதாயத்திற்கான பயன்கள் ;–

பொருளாதார வளர்ச்சி

- ✓ உற்பத்தித் தேவைகளுக்காக நிலையான சேமிப்புகளை உறுதிப்படுத்துவதன் மூலம் பொருளாதார வளர்ச்சியை இது துரிதப்படுத்துகிறது.

நிதி திரட்டல் தளம்

- ✓ இது நன்கு நிர்வகிக்கப்பட்ட, லாபத்தை உருவாக்கும் நிறுவனங்கள் அவ்வப்போது புதிய பங்குகளின் மூலம் வரம்பற்ற நிதியை திரட்டஉதவுகிறது.

வளங்களை மாற்றுதல்

- ✓ வளங்களை சிறந்த முறையில் பயன்படுத்தி, நிறுவனத்தை செம்மையாக இயக்குவதற்கு வளங்கள் பகிர்ந்தளிக்கப்படுகின்றன.

நிறுவனத்திற்கான பயன்கள் ;–

நிறுமத்தின் மீதான நன்மதிப்பு அல்லது புகழ் உயருதல்.

- ✓ நிறுவனத்தின் மீதான நன்மதிப்பு அல்லது புகழ் உயருதல்
- ✓ பங்கு மாற்றகங்களில் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் அதிகப்படியான நற்பெயரையும், கடன் பெறும் தன்மையையும் பெற்றுள்ளது.

விரிவான சந்தை

- ✓ பங்குகளுக்கு விரிவான சந்தை தயாராகஉள்ளது.

பெரும் நிதி திரட்டப்படுதல்

- ✓ பங்குகள் மற்றும் கடனீட்டுப் பத்திரங்களின் மூலம் பங்குச் சந்தையால் எளிதில் பெரும் நிதியைப் பெற முடியும்.

முதலீட்டாளர்களுக்கான பயன்கள் ;–

நீர்மைத்தன்மை

- ✓ பங்கு மாற்றகம் முதலீட்டாளர்கள் தங்களது பங்குகளை விரைவாக பணமாக மாற்றுவதற்கு உதவுகிறது,
- ✓ இதனால் அவரது முதலீடுகளின் பணப்புழக்கம் அதிகரிக்கிறது.

பாதுகாப்பு இணை மதிப்பு சேர்க்கை

- ✓ வங்கிகளில் கடன் பெறும் பொழுது பங்கு பத்திரங்களுக்கு பங்கு பரிமாற்ற நிலையங்களில் வழங்கப்படும் பாதுகாப்பு மதிப்பு சேர்க்கப்படுகிறது.

முதலீட்டாளர் பாதுகாப்பு

- ✓ பங்குச்சந்தை பரிவர்த்தனைகள், முதலீட்டாளர்களின் வட்டி மற்றும் அதன் விதிமுறைகள் ஆகியவற்றை கடுமையாக நடைமுறைப்படுத்துவதன் மூலம் நியாயமான ஒப்பந்தத்தை உறுதிப்படுத்துகிறது.

பங்கு பத்திரங்களின் உண்மையான மதிப்பை மதிப்பீடு செய்தல்

- ✓ ஒரு முதலீட்டாளர் தன்னிடம் உள்ள பத்திரங்களின் உண்மையான மதிப்பை தினசரி பத்திரிகைகள் மற்றும் வலைதளங்களின் உதவியுடன் சந்தையில் எளிதாக மதிப்பீடு செய்யலாம்.

4. பங்குச் சந்தை – பொருட்கள் பரிமாற்றம் பேறுபாடு காண்க.

சிறப்பியல்புகள்	பங்கு பரிவர்த்தனை	பண்டமாற்று பரிவர்த்தனை
பொருள்	பங்கு சந்தை என்பது தொழில்துறை மற்றும் நிதிப்பாதுகாப்பின் கொள்முதல் மற்றும் விற்பனைக்கான ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட சந்தை ஆகும்.	ஒரு பண்டமாற்ற பரிமாற்றம் என்பது பண்டமாற்ற சந்தைகளில் வர்த்தகம் செய்யப்படும் இடத்தில் பொருட்களை பரிமாற்றம் செய்வதாகும்.
பணிகள்	எளிதான சந்தைப்படுத்துதலை வழங்குதல்	பத்திரங்களுக்கு தேவை ஏற்படுத்துதல் அல்லது பத்திரங்களுக்கு விலைக் காப்பீடு சேவைகள் மற்றும் நீர்மைதன்மை ஏற்படுத்துதல்.
நோக்கம்	பொருள் மூலதன உருவாக்கம் மற்றும் மூலதன ஆதாரங்களை சிறந்த முறையில் பயன்படுத்துதல்	ஆபத்து குறைவு மூலம் பொருட்கள் விற்பனையை அதிகரிக்க உதவுதல்.

பங்கேற்பாளர்	முதலீட்டாளர்கள் மற்றும் ஊக வணிகர்கள்	தயாரிப்பாளர்கள் முகவர்கள் நிறுவனங்கள் வியாபாரிகள் மற்றும் ஊக வணிகர்கள்
ஒப்பந்தங்களின் காலம்	ரொக்கம் , உடனடி வழங்கல் மற்றும் பதினைந்து நாட்களுக்கான ஒப்பந்த கணக்கு	எதிர்கால சந்தை ஒப்பந்தங்களுக்கான 2 அல்லது 3 மாதங்கள் கால செலுத்துகை மற்றும் உடனடி பண ஒப்பந்தங்கள்
விலை மேற்கோள்	முன்னோக்கிய ஒப்பந்தங்களைப் பொறுத்தவரை ஒரு முனை மேற்கோள் மட்டுமே சாத்தியம்	எதிர்கால ஒப்பந்தங்களுக்கான பலமுனை மேற்கோள் சாத்தியமாகும்.

5. லம்மார்டு தெரு மற்றும் வால் தெரு – விளக்குக.

லம்பார்டு தெரு

- ✓ இலண்டன் நகரின் லம்பார்டு தெரு இலண்டன் நகரத்தின் வணிகம், வங்கி, காப்பீட்டுத் தொழில் மற்றும் இடைக்கால நீட்சியாக குறிப்பிட்டளவு தொடர்பு ஏற்படுத்தியுள்ளது.
- ✓ இந்த தெருவின் மொத்த நீளம் 260 மீட்டராகும்.
- ✓ நியுயார்க் நகரத்தின் வால் தெரு போன்று உள்ளது.

வால் தெரு

- ✓ வால் தெரு நியுயார்க் நகரத்தின் லோயர் மன்ஹாட்டனில் நியுயார்க் பங்குச் சந்தையின் உண்மையான இல்லமாக இருக்கிறது.
- ✓ அமெரிக்க தரகு மற்றும் முதலீட்டு வங்கிகளின் வரலாற்று சிறப்புமிக்க தலைமையமாக உள்ளது.
- ✓ வால் தெரு என்பது நிதி மற்றும் முதலீட்டுச் குழுவின் ஒருங்கிணைந்த பெயராக உள்ளது

8.இந்தியப் பத்திர மாற்றக வாரியம் (செபி)

I. குறு வினாக்கள் –

1. செபி பற்றிய சிறுகுறிப்பு வரைக.

- ✓ மூலதனச் சந்தையை ஒழுங்குபடுத்த மற்றும் கட்டுப்படுத்த ஏற்படுத்தப்பட்ட உயரமைப்பு . செபி ஆகும்.
- ✓ இது 1988 ஆம் ஆண்டு சட்டபுர்வமற்ற அமைப்பாக நிறுவப்பட்டது.
- ✓ 1992 மே மாதம் 12ல் சட்டமுறை அதிகாரம் பெற்றது.
- ✓ மும்பையில் உள்ள பாந்திராகுர்லா வணிக வளாகத்தில் செபியின் தலைமையகம் உள்ளது.

2. செபியின் இரண்டு நோக்கங்களை எழுதுக.

- ✓ முதலீட்டாளர்களை பாதுகாப்பது
- ✓ உள்வழிவியாபாரத்தை சரிபார்த்தல்
- ✓ தரகர் மீதான கட்டுப்பாடு
- ✓ பங்கு பரிவர்த்தனைகளின் ஒழுங்குமுறை
- ✓

3. புறத்தோற்றமற்ற பத்திர கணக்கு என்றால் என்ன ?

- ✓ புறத்தோற்றமற்ற பத்திர கணக்கு என்பது ஒருவர் மின்னணு அல்லது புறத்தோற்றமற்ற வடிவத்தில் வாங்கக்கூடிய அனைத்து பங்குகளையும் குறிக்கிறது.
- ✓ புறத்தோற்றமற்ற பத்திர கணக்கு சாதாரண வங்கிக் கணக்கைப் போல பங்குகள், பத்திரங்கள், அரசாங்கப் பத்திரங்கள், பரஸ்பர நிதிகள் மற்றும் பரிமாற்ற வர்த்தக நிதிகள் போன்றவைகளை வைத்துள்ளது.

4. செபியின் தலைமையகம் பற்றி குறிப்பிடுக.

- ✓ செபியின் தலைமையகம் மும்பையில் உள்ள பாந்திராகுர்லா வணிக வளாகத்தில் அமைந்துள்ளது.
- ✓ புதுதில்லி , கொல்கத்தா , சென்னை மற்றும் அகமதாபாத்தில் வடக்கு , கிழக்கு, தெற்கு, மற்றும் மேற்கு பிராந்திய அலுவலகங்கள் உள்ளன.

5. பல்வேறு அடையாள ஆதாரங்கள் யாவை ?

- ✓ நிரந்தர் கணக்கு எண்
- ✓ வாக்காளர் அட்டை
- ✓ ஓட்டுநர் உரிமம்
- ✓ வங்கி செல் புத்தகம்
- ✓ மின்கட்டண இரசீது
- ✓ வருமான வரி படிவங்கள்

II. சிறு வினாக்கள் –

1. புறத்தோற்றமற்ற பத்திரங்கள் என்றால் என்ன ?

- ✓ புறத்தோற்றமற்ற பத்திரங்கள் உருவாக்கம் என்பது நிறுவன பதிவாளரால் காகித வடிவிலான பங்குச் சான்றிதழை அழித்து புறத்தோற்றமில்லாத வகையில் பத்திரங்களாக மாற்றுதல் ஆகும்.
- ✓ அதற்குத் சமமான எண்ணிக்கையிலான பத்திரங்கள் வைப்புத்தாரால் முதலீட்டுதாரர்களின் கணக்கில் வரவு வைக்கப்படும்.
- ✓ முதலீட்டாளர்களின் வேண்டுகோளின் பேரில் புறத்தோற்றமற்ற பத்திரங்களாக உருமாற்றம் செய்யப்படுகிறது.

2. புறத்தோற்றமற்ற பத்திர கணக்கிற்கு தேவையான ஆவணங்களை கூறுக ?

✓ பாஸ்போர்ட் அளவு புகைப்படத்துடன் கணக்கு துவக்க படிவத்துடன் அடையாள மற்றும் முகவரி சான்றுகளை சமர்ப்பிக்க வேண்டும்.

✓ ஆவணங்களின் நகல் பிரதிகளை மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும். ஆனால் சரிபார்ப்புக்கு மூலச்சான்றிதழ்கள் கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும்.

அடையாளச் சான்று	முகவரிச் சான்று
✓ நிரந்தர் கணக்கு எண்	குடும்ப அட்டை
✓ வாக்காளர் அட்டை	கடவுச் சீட்டு
✓ ஓட்டுநர் உரிமம்	வாக்காளர் அடையாள அட்டை
✓ வங்கி செல் புத்தகம்	விடுப்பு மற்றும் விற்பனை தொடர்பான ஒப்பந்தம்
✓ மின்கட்டண இரசீது	தொழில் முறை அமைப்பு வழங்கிய முகவரிச்சான்று
✓ வருமான வரி படிவங்கள்	

3. பத்திர ஒப்பந்தங்கள் சட்டப்படி செபியின் அதிகாரங்களை விளக்குக.

- ✓ பங்குச்சந்தை திறம்பட ஒழுங்குபடுத்த நிதி அமைச்சகம் பத்திரங்கள் ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் பல்வேறு அதிகாரங்களை செபிக்கு 13 செப்டம்பர், 1994 அன்று ஒரு அறிவித்தல் மூலம் வழங்கியுள்ளது.
- ✓ ஒவ்வொரு பங்குச்சந்தையிலும் ஆளும் குழுவில் மூன்று உறுப்பினர்களை நியமிக்க நிதி அமைச்சகம் செபிக்கும் அதிகாரம் அளிக்கிறது.

4. உள்வழி வர்த்தகம் என்றால் என்ன ?

- ✓ நிறுவனத்தின் சில ரகசிய தகவலை அணுகும் மற்றும் இந்த ரகசிய தகவலைப் பயன்படுத்த விரும்பும் நபர்களான இயக்குனர்கள், தோற்றுவிப்பாளர்கள் மற்றும் பிற நபர்களால் மேற்கொள்ளப்படும் பங்கு பரிவர்த்தனை நடவடிக்கைகள் உள்வழிவியாபாரம் ஆகும்.
- ✓ இது பொது முதலீட்டாளர்களின் நலன்களை பாதிக்கிறது

5. செபி அமைப்பின் கட்டமைப்புகளை வரைக.



III. பெரு வினாக்கள் –

1. செபியின் பணிகளை விவரி.

- ✓ போதுமான கல்வி மற்றும் வழிகாட்டல் மூலம் முதலீட்டாளர்களின் நலன்களை பாதுகாக்கிறது.
- ✓ முதலீட்டாளர்களிடமிருந்து பெற்ற புகார்களை கவனித்துக் கொள்கிறது.
- ✓ பங்கு சந்தைகளில் வியாபாரத்தை ஒழுங்குபடுத்துதல் மற்றும் கட்டுப்படுத்துதல். தரகர்கள் மற்றும் துணைதரகர்கள் ஆகியோர் நிதிச்சந்தையில் பதிவு செய்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது,
- ✓ பங்குபரிவர்த்தனைவிசாரணைகள், இடைத்தரகர்கள் மற்றும் தன்னியக்க ஒழுங்குபடுத்தும் அமைப்புகளைஆய்வு செய்தல்.
- ✓ பத்திரங்களில் உள்வழி வர்த்தகத்தை தடைசெய்கிறது.
- ✓ பங்கு சந்தைகளில் செயல்படும் நிதி இடைத்தரகர்களால் மேற்கொள்ளப்படும் மோசடியான மற்றும் நியாயமற்ற முறைகளை தடை செய்கிறது.
- ✓ பத்திரங்கள் சந்தையுடன் தொடர்பு படுத்தக்கூடிய பல்வேறு இடைத்தரகர்கள் ஆகியோரின் பதிவு மற்றும் செயல்பாடுகளை கட்டுப்படுத்துகிறது.
- ✓ மூலதனச் சந்தையை மேம்படுத்துவதற்கான அணுகுமுறையை வளர்த்துக் கொள்வதற்காக படிகளை மேற்கொள்கிறது.

- ✓ இந்திய மத்திய அரசாங்கத்தால் வழங்கப்படும் செயல்பாடுகளை செயல்படுத்துதல்.
- ✓ நிதி இடைத்தரகர்களுக்கு பொருத்தமான பயிற்சி அளித்தல். பங்குச் சந்தையில் ஆரோக்கியமான சூழலுக்கு இந்த செயல்பாடு மிகவும் முக்கியமானது,

2. செபியின் அதிகாரங்களை விவரி.

பங்குச்சந்தைகள் மற்றும் இடைத்தரகர்கள் தொடர்பான அதிகாரங்கள்

- ✓ பத்திர வணிகத்தை மேற்கொள்ளும் பங்கு மாற்றகங்கள் மற்றும் இடைத்தரகர்களிடம் செபி பரந்த அதிகாரங்களைக் கொண்டுள்ளது.
- ✓ ஆய்வு மற்றும் கூர்ந்தாய்வு மற்றும் பிறநோக்கத்திற்காக வணிகபரிவர்த்தனைகளில் பங்குச்சந்தை மற்றும் இடைத்தரகர்களிடமிருந்து தகவலை கேட்கலாம்.

நாணய அபராதங்களை விதிக்கும் அதிகாரம்

- ✓ மூலதனசந்தை இடைத்தரகர்கள் மற்றும் பிறபங்கேற்பாளர்கள் மீது வரம்பு மீறல்களுக்கு நாணய அபராதங்களை சுமத்துவதற்கு செபி அதிகாரத்திற்கு உட்பட்டுள்ளது.
- ✓ இது ஒரு குறுகிய காலத்திற்கு தங்கள் பதிவை தற்காலிகமாக நிறுத்தி வைக்கலாம்.

பணியிடங்களில் செயல்பாடுகளை தொடங்குவதற்கான அதிகாரம் ஒதுக்கப்பட்டுள்ளது

- ✓ செபி ஒதுக்கப்பட்டுள்ள பணிகள் குறித்து நடவடிக்கைகளை ஆரம்பிக்க ஒரு அதிகாரம் உண்டு. உதாரணமாக, இது பல்வேறு இடைத்தரகர்களுக்கு வழிகாட்டுதல்களை வழங்கலாம் அல்லது முதலீட்டாளர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கான குறிப்பிட்ட விதிகளை அறிமுகப்படுத்தலாம்.

பத்திரங்களில் உள்வழி வர்த்தகத்தை ஒழுங்குபடுத்துவதற்கான அதிகாரம்

- ✓ உள்வழி வர்த்தகத்தை ஒழுங்குபடுத்தும் அதிகாரம் அல்லது வணிக வங்கியாளர்களின் பணிகளை ஒழுங்குபடுத்தும் அதிகாரங்களை செபி கொண்டுள்ளது.

பத்திரங்கள் ஒப்பந்த சட்டத்தின் கீழ் உள்ள அதிகாரங்கள்

- ✓ பங்குச்சந்தை திறம்பட ஒழுங்குபடுத்த நிதி அமைச்சகம் பத்திரங்கள் ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் பல்வேறு அதிகாரங்களைசெபிக்கு 13 செப்டம்பர், 1994 அன்று ஒரு அறிவித்தல் மூலம் வழங்கியுள்ளது.
- ✓ ஒவ்வொரு பங்குச்சந்தையிலும் ஆளும் குழுவில் மூன்று உறுப்பினர்களை நியமிக்க நிதி அமைச்சகம் செபிக்கும் அதிகாரம் அளிக்கிறது.

பங்குச்சந்தை வணிகத்தை ஒழுங்குப்படுத்தும் அதிகாரம்

- ✓ பத்திரச் சந்தைமற்றும் பரஸ்பர நிதியுடன் தொடர்புடைய இடைநிலையர்கள், மோசடியான மற்றும் முறையற்ற வியாபார செயல்பாடுகள் மற்றும் நிறுவனங்கள் ஒருங்கிணைப்பு போன்றவற்றை ஒழுங்குபடுத்தும் அதிகாரங்களை செபி கொண்டுள்ளது.

3. புறத்தோற்றமற்ற பத்திரங்களின் நன்மைகளை விவரி.

- ✓ இழப்பு, திருட்டு, மோசடி மற்றும் சேதம் போன்ற பங்குச் சான்றிதழ்களைப் பற்றிய அபாயங்கள் புறத்தோற்றமற்ற பத்திரங்களினால் முழுமையாக நீக்கப்படுகின்றன.
- ✓ காகிதப் பரிவர்த்தனைகளைவிட புறத்தோற்றமற்ற பத்திர வர்த்தகம் மூலம் விரைவாக பரிவர்த்தணைகள் மற்றும் வர்த்தகத்தில் அதிக செயல்திறன் ஆகியவற்றை வழங்குகிறது. பங்கு கணக்குகள் தானாக நிகழ்நிலைப் படுத்தப்படுகிறது.
- ✓ தரகர்களின் வருகை தேவையில்லாமலேயே எந்த இடத்திலும் கணிணியில் வர்த்தகம் செய்ய முடியும் என்பதால் வர்த்தகம் என்பது மிகவும் வசதியாகி விட்டது.

- ✓ நிறுவனங்களின் ஒருங்கிணைப்பு மற்றும் பங்குகள் இணைப்பு மூலம் உருவாக்கப்படும் பங்குகள் புறத்தோற்றமற்ற பத்திரங்களாக முதலீட்டாளர்களின் கணக்கில் வரவு வைக்கப்படும்.
- ✓ பத்திரங்களைபரிமாற்றுவதற்காகமுத்திரைத்தாள் கட்டணகடமைஅவசியமில்லை. இதனால் கணிசமான அளவிற்கு பரிவர்த்தனைசெலவைக் குறைக்கிறது.
- ✓ ஒரு குறிப்பிட்டகணக்கில் பங்கு மற்றும் கடனீட்டு பத்திரங்களைஇருவரும் வைத்திருக்க சில வங்கிகள் அனுமதிக்கின்றன.
- ✓ வங்கிகள் அனைத்து நடைமுறைகளிலும் வாடிக்கையாளர்களுக்கு உதவுவதற்காக அர்ப்பணிப்பு மற்றும் நன்கு பயிற்றுவிக்கப்பட்ட வாடிக்கையாளர் சேவையாளர்களை வைத்துள்ளனர்.
- ✓ புறத்தோற்றமற்ற கணக்கு வைத்திருப்பவர் பங்குகளை எந்தஅளவு வாங்கவும் மற்றும் விற்கவும் முடியும். இருப்பினும் காகித வடிவிலான பத்திரங்கள் வைத்திருப்பவர் மேற்கொள்ளும் பரிவர்த்தனைகளின் எண்ணிக்கையில் வரம்பு உண்டு.
- ✓ கடன் வழங்குபவருக்கு ஒரு இணைப்பாக வழங்குவதன் மூலம் ஒரு புறத்தோற்றமற்ற பத்திர கணக்கு வைத்திருப்பவர் கணக்கில் நடைபெறும் பத்திரங்களுக்கு எதிராக கடனை வழங்குகின்றனர்.

9. மனித வள மேம்பாட்டின் அடிப்படைகள்

I. **குறு வினாக்கள் –**

1. மனித வளத்தின் பொருள் தருக.

- ✓ எவர் ஒருவர் திறமை, தனித்திறன், அறிவு, தகுதிகள், போட்டித்திறன் மற்றும் செயல்திறன் பெற்றிருக்கிறாரோ அவரே மனித வளம் ஆவார்.

2. மனித வள மேலாண்மை என்றால் என்ன ?

- ✓ மனித வள மேலாண்மை என்பது ஒரு நிறுவனத்தில் ஆட்களை பணியமர்த்தல், ஊக்குவித்தல் மற்றும் நிர்வகித்தல் தொடர்பான மேலாண்மை பணியை செய்வதாகும்.

3. மனித மேலாண்மையின் இயல்புகளில் ஏதேனும் இரண்டு கூறுக.

- ✓ மனித வள மேலாண்மை உலகளவில் பொருந்தக்கூடியதாக உள்ளது.
- ✓ மனித வள மேலாண்மை மற்ற உற்பத்தி காரணிகளைப் போல் அல்ல , அவைகள் உணர்வுகள் மற்றும் உணர்ச்சிகளை கொண்டுள்ளன.

4. மனித வளத்தின் பண்புகளில் ஏதேனும் இரண்டை குறிப்பிடுக.

- ✓ உற்பத்தி செய்யும் ஒரேகாரணியாக மனித வளம் திகழ்கிறது.
- ✓ பிறஅனைத்து வளங்களையும் மனித வளம் உருவாக்குகிறது.
- ✓ பணியமர்த்தப்பட்டபணியாளர்களைகொண்டதேதவிர மனித வளம் என்பது பணியாளர்அல்ல.

5. மனித வள மேலாண்மையின் பணிகளை பட்டியலிடுக.

- ✓ திட்டமிடுதல்
- ✓ அமைத்தல்
- ✓ இயக்குவித்தல்
- ✓ கட்டுப்படுத்துதல்

II. சிறு வினாக்கள் –

1. மனித வள மேலாண்மையின் வரைவிலக்கணம் தருக.

"வேலைவாய்ப்பில் மனிதவளத்தின் பயன்பாடு மற்றும் அதன் வளர்ச்சி, திட்டமிடுதலில் திறன்மிக்க படிநிலைகள் மற்றும் பயன்பாட்டினை இயக்குதல் ஆகும்". – டேல் யோடர்

ஒரு பகுதியாகும். மேலும் அவை ஒரு நிறுவனத்தின் மனிதக் கூறுகளை முதன்மையாக கருத்தில் கொண்டுள்ளது". – ஈ.எஃப்.எல். ப்ரெச்

2. மனித வளங்களின் இயல்புகள் யாவை ?

- ✓ உற்பத்தி செய்யும் ஒரே காரணியாக மனித வளம் திகழ்கிறது.
- ✓ பிற அனைத்து வளங்களையும் மனித வளம் உருவாக்குகிறது.
- ✓ பணியமர்த்தப்பட்ட பணியாளர்களை கொண்டதே தவிர மனித வளம் என்பது பணியாளர் அல்ல.
- ✓ மனித வளமானது கண்டுபிடிப்பு மற்றும் படைப்பாற்றல் ஆகியவற்றை வெளிப்படுத்துகிறது.
- ✓ மனித வளங்கள் தனியாக சிந்திக்கவும், செயல்படவும், பகுப்பாய்வு செய்யவும், மற்றும் விளக்கவும் முடியும்.
- ✓ மனித வளங்கள் உணர்ச்சிபூர்வமானவை.
- ✓ நிதியுடன் அல்லது நிதியில்லாமலும் மனித வளங்கள் ஊக்குவிக்கப்படலாம்.
- ✓ மனித வளங்களின் நடத்தைகளை ஊகிக்கமுடியாது.

3. மனித வளம் மற்றும் மனித வள மேலாண்மைக்கு இடையே உள்ள வேறுபாடுகளில் ஏதேனும் இரண்டு தருக.

அடிப்படை	மனித வளம்	மனித வள மேலாண்மை
பொருள்	தனிப்பட்ட மற்றும் நிறுவனக் குறிக்கோள்களை அடைவதற்கு எவர் ஒருவர் திறமை , தனித்திறன் , அறிவ , தகுதிகள் , போட்டித்திறன் மற்றும் சொல் திறன் பெற்றிருக்கிறாரோ அவரே மனித வளமாக கருதப்படுகிறார்.	மனித வளத்தை நிர்வகிக்கும் மேலாண்மையின் கிளையே மனித வள மேலாண்மை என அழைக்கப்படுகிறது.
காரணி	உற்பத்தி செய்யும் ஒரே காரணியாக இது திகழ்கிறது.	திறன்மிக்க மேலாண்மை எங்கு இருக்கிறதோ அங்கெல்லாம் இது இருக்கிறது.

4. மனித வளத்தின் முக்கியத்துவம் என்ன ?

i. மனித வளத்தின் மூலமாக மட்டுமேமற்ற அனைத்து வளங்களும் திறம்பட பயன்படுத்தப்படுகின்றன.

ii. ஒரு நிறுவனத்தின் நிலையான வளர்ச்சி முக்கிய வளமானமனித வளத்தை சார்ந்துள்ளது.

iii. தொழில்துறை உறவுகள் மனித வளத்தை சார்ந்துள்ளது.

iv. மனித வளங்கள் மூலமாக மட்டுமே மனித உறவுகள் சாத்தியமாகிறது

v. மனித வளமானது பிற அனைத்து உற்பத்தி காரணிகளையும் நிர்வகிக்கிறது.

vi. பயிற்சி மற்றும் அபிவிருத்தி திட்டங்களின் மூலம் மனித வளங்களின் திறனை மேம்படுத்த முடியும்.

5. மனித வள மேலாண்மையின் பணிகளை கூறுக.

திட்டமிடுதல்

அமைத்தல்

இயக்குவித்தல்

கட்டுப்படுத்துதல்

III. நெடு வினாக்கள் –

1. மனித வளத்தின் தனிப்பட்ட அம்சங்களை விளக்குக.

i. உற்பத்தி செய்யும் ஒரே காரணியாக மனித வளம் திகழ்கிறது.

ii. பிறஅனைத்து வளங்களையும் மனித வளம் உருவாக்குகிறது.

iii. பணியமர்த்தப்பட்ட பணியாளர்களை கொண்டதே தவிர மனித வளம் என்பது பணியாளர்அல்ல.

iv. மனித வளமானது கண்டுபிடிப்பு மற்றும் படைப்பாற்றல் ஆகியவற்றை வெளிப்படுத்துகிறது.

v. மனித வளங்கள் தனியாக சிந்திக்கவும், செயல்படவும், பகுப்பாய்வு செய்யவும், மற்றும் விளக்கவும் முடியும்.

vi. மனித வளங்கள் உணர்ச்சிபூர்வமானவை.

vii. நிதியுடன் அல்லது நிதியில்லாமலும் மனித வளங்கள் ஊக்குவிக்கப்படலாம்.

viii. மனித வளங்களின் நடத்தைகளை ஊகிக்க முடியாது.

ix. மனித வளங்களால் உண்டாகும் மதிப்பு மற்றும் பாராட்டுகள் நீண்டகாலத்திற்கு கிடைக்கிறது

x. மனித வளங்கள்நகரும் தன்மை கொண்டது

xi. மனித வளமானது ஒரு குழுவாக செயல்படாலாம்

2. மனித வள மேலாண்மையின் முக்கியத்துவத்தை விளக்குக.

மனித சக்தி தேவைகளை அடையாளம் காணுதல்:

✓ ஒரு நிறுவனத்தில் மனிதவள தேவைகளைத் தீர்மானிப்பது என்பது மிகவும் முக்கியமான ஒரு முதலீட்டு முறையாகும்.

✓ செலவுகளை மேம்படுத்த, நிறுவனத்திற்கு தேவைப்படும் நபர்களின் எண்ணிக்கையை துல்லியமாக அடையாளம் காணப்பட வேண்டும்.

மாற்றங்களை இணைத்துக்கொள்ளல்:

✓ மாற்றம் என்பது எந்த அமைப்பிலும் நிலையானது மற்றும் இந்த மாற்றத்தை நிறுவனத்தில் திறன்பட அறிமுகப்படுத்த மனித வள மேலாண்மை ஒரு முகவராக செயல்பட வேண்டும்.

மனித சக்தியின் சரியான தேவையை உறுதி செய்தல்:

✓ மனிதவள மேலாண்மையின் மூலமாக நிறுவனத்தில் எந்த நேரத்திலும் பணியாளர்கள் பற்றாக்குறை அல்லது உபரி ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

சரியான வேலைக்கு சரியான நபரை தேர்ந்தெடுத்தல்:

✓ சரியான வேலைக்கு சரியான தகுதியுடைய நபர்களை மனிதவள மேலாண்மை உறுதிப்படுத்துவதால், நிறுவனத்தில் குறைதகுதி அல்லது மிகைதகுதி உடைய பணியாளர்கள் இல்லாத நிலை ஏற்படுகிறது.

திறன் மற்றும் அறிவை மேம்படுத்துதல்:

www.Padasalai.Net www.TrbTnpsc.com

- ✓ பணியாளர்திறன் மற்றும் அறிவு மேம்பாடு செயல்பாடுகளை நிர்வகிப்பதில் மனித வள மேலாண்மையின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்தாக இருப்பதோடு மட்டுமில்லாமல் பயிற்சி மற்றும் வளர்ச்சித் திட்டங்கள்மூலம் இன்று வரைஇருக்கும் தொழில் சார்ந்த அறிவை பணியாளர்களுக்கு வழங்குகிறது.

பணியாளர்களின் செயல்திறனை மதிப்பிடுதல்:

- ✓ மனித வள மேலாண்மை நடவடிக்கைகள் மூலம் குறிப்பட்டகால இடைவெளிகளில் பணியாளர்களின் செயல்திறன்களை மதிப்பீடு செய்வதால் நன்கு பணிபுரிவோரின் திறனை அதிகரிக்கவும், மெதுவாக பணிபுரிவோர்களை ஊக்கமளிக்கவும் முடிகிறது. பணியாளர்கள் தங்களின் செயல்திறன் நிலையை அறிய இது உதவுகிறது.

3. மனித வள மேலாண்மையின் மேலாண்மைப் பணிகளை விவரி.

திட்டமிடுதல் –

- ✓ என்ன செய்ய வேண்டும், எப்படி செய்ய வேண்டும் , யார் செய்ய வேண்டும் என்பதை முன்கூட்டியே தீர்மானிப்பது திட்டமிடுதல் ஆகும்.
- ✓ திட்டமிடுதல் முறையான வணிக செயல்பாட்டிற்கு உதவுகிறது.

அமைத்தல் –

- ✓ பணியாளர்களிடையே வேலைப் பகிர்வினை ஏற்படுத்துவது அமைப்பாகும்.
- ✓ இரு ஒவ்வொரு பணியாளர்களுக்கும் அவர்களுக்குரிய கடமைகள் தேவைப்படும் அதிகார ஒப்படைவு மற்றும் பொறுப்புகளை வழங்குகிறது.

இயக்குவித்தல் –

- ✓ பணியாளர்கள் தங்களது பணியினை சிறப்பாக செய்து முடிக்க அவர்களுக்கு ஆணைகளும் குறிப்புகளும் வழங்குவதோடு வழிகாட்டுதல், ஊக்கமூட்டுதல் மற்றும் மேற்பார்வை செய்தல் போன்றவற்றில் ஈடுபடுகிறது .
- ✓ நேர ஆற்றல் மற்றும் பணம் போன்றவற்றில் ஏற்படும் வீண் விரயங்களை குறைக்கிறது.

கட்டுப்படுத்துதல் –

- ✓ திட்டமிட்டப்படி பணிகளை பணியாளர்கள் செய்கிறார்களா என்பதை அறிய உண்மையான செயல்பாட்டை வரையளவு செய்யப்பட்ட செயல் அளவுடன் ஒப்பிட்டு வேறுபாட்டிற்கான காரணங்களை கண்டறிந்து களைவது கட்டுப்படுத்தலாகும்.

4. மனித வள மேலாண்மையிலிருந்து மனித வளத்தை வேறுபடுத்திக் காட்டுக.

அடிப்படை	மனித வளம்	மனித வள மேலாண்மை
பொருள்	தனிப்பட்ட மற்றும் நிறுவனக் குறிக்கோள்களை அடைவதற்கு எவர் ஒருவர் திறமை , தனித்திறன் , அறிவ , தகுதிகள் , போட்டித்திறன் மற்றும் சொல் திறன் பெற்றிருக்கிறாரோ அவரே மனித வளமாக கருதப்படுகிறார்.	மனித வளத்தை நிர்வகிக்கும் மேலாண்மையின் கிளையே மனித வள மேலாண்மை என அழைக்கப்படுகிறது.
காரணி	உற்பத்தி செய்யும் ஒரே காரணியாக இது திகழ்கிறது.	திறன்மிக்க மேலாண்மை எங்கு இருக்கிறதோ அங்கெல்லாம் இது இருக்கிறது.
வெளிப்படுத்துதல்	இது கண்டுபிடிப்பு மற்றும் படைப்பாற்றல் ஆகியவற்றை வெளிப்படுத்துகிறது.	இது பணியாளர்களிடையே வேலைப்பகிர்வினை வெளிப்படுத்துகிறது.
தன்மை	இது நகரும் தன்மை கொண்டது.	இது நிறுவனத்துடன் தொடர்புடையது.

காணப்படும் இடம்	மனிதவளம் எங்கு இருக்கிறதோ அங்கெல்லாம் மனித வள மேலாண்மை இருக்கிறது.	திறன் மிக்க மேலாண்மை எங்கு இருக்கிறதோ அங்கெல்லாம் மனித வளம் இருக்கிறது.

5. மனித வள மேலாண்மையின் செயல்பாட்டு பணிகளை விவாதிக்கவும்..

திரட்டுதல்:

வேலை பகுப்பாய்வு, மனித வள திட்டமிடல், ஆட்சேர்ப்பு, தேர்வு, வேலைவாய்ப்பு, பணிமாற்றம் மற்றும் பதவி உயர்வு ஆகியவற்றின் மூலம் மனித வளத்தை ஈர்க்கும் செயலை குறிக்கிறது.

வளர்ச்சி:

செயல்திறன் மதிப்பிடுதல், பயிற்சி, செயலதிகாரி வளர்ச்சி, தொழில் திட்டமிடல் மற்றும் வளர்ச்சி, நிறுவன வளர்ச்சி ஆகியவற்றை உள்ளடக்கியது அபிவிருத்தியாகும்.

ஊதியம்:

இது வேலை மதிப்பீடு, ஊதியம் மற்றும் சம்பள நிர்வாகம், ஊக்கத்தொகை, மேலூதியம், விளிம்பு நலன்கள் மற்றும் சமூக பாதுகாப்புத் திட்டங்கள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது

ஊழியர்களை தக்கவைத்துக்கொள்ளுதல்:

சுகாதார மற்றும் பாதுகாப்பு, நலன், சமூக பாதுகாப்பு, வேலைதிருப்தி மற்றும் வேலையினால் ஏற்படும் வாழ்க்கைத் தரத்தின் மூலம் இது சாத்தியமாகிறது.

10. ஆட்சேர்ப்பு முறைகள்

I. குறு வினாக்கள் –

1. ஆட்சேர்ப்பின் பொருள் தருக.

- ✓ ஒரு நிறுவனத்தில் உள்ள பல்வேறு பணியிடங்களுக்கு பொருத்தமான நபர்களைக் தேர்ந்தெடுக்கும் பணி செயல்முறை ஆட்சேரப்பு ஆகும்.
- ✓ இது வேலைக்கு விண்ணப்பிக்க தகுதியான நபர்களை கவர்ந்திழுக்கும் செயல் ஆகும்.

2. பதவி உயர்வு என்றால் என்ன ?

- ✓ பணிமூப்பு மற்றும் தகுதியின் அடிப்படையில் பணியாளர்கள் நிறுவன அமைப்பின் படிநிலையில் உள்ள கீழ்மட்ட நிலையிலிருந்து மேல்மட்ட நிலைக்கு சென்று பணி புரிய வாய்ப்பு அளிக்கப்படுவதே பதவி உயர்வு ஆகும்.

3. அக வள ஆட்சேர்ப்பின் ஏதேனும் இரண்டு நன்மைகளை கூறுக.

- ✓ ஒரு துறையில் இருக்கும் உபரி பணியாளர்களை பற்றாக்குறை உள்ள மற்ற துறைகளுக்கு பணி மாற்றம் செய்வதன் மூலம் காலிப்பணியிடங்களுக்கு தேவையான பணியாளர்களை நிரப்பலாம்.
- ✓ பணியாளர்கள் கீழ்மட்ட நிலையிலிருந்து மேல்மட்ட நிலை நோக்கி செல்ல செயல்திறன் மதிப்பீட்டு முறை உதவுகிறது

4. **வளாக ஆட்சேர்ப்பின் அம்சங்களில் ஏதேனும் இரண்டை குறிப்பிடுக.**

- ✓ கல்வி நிறுவனங்களுக்கு நேரடியாக சென்று நல்ல கல்வித் தகுதியுடைய விண்ணப்பதாரர்களை வளாகத் தேர்வின் மூலம் தேர்ந்தெடுக்கலாம்.
- ✓ வளாக ஆட்சேர்ப்பின் மூலம் காலம் வீணாவது தடுக்கப்படுகிறது.
- ✓

5. **புறவள ஆட்சேர்ப்பின் நன்மைகளை பட்டியலிடுக.**

- ✓ எவ்வித அறிவிப்பும் செய்யாத நிலையில் வேலை தேடுவோர் தன்னிச்சையாக வேலை வேண்டி விண்ணப்பித்த விண்ணப்பங்களை தேவைப்படும் நேரத்தில் நிறுவனம் பயன்படுத்திக் கொள்ளலாம்.
- ✓ வேலை தேடி நிறுவனத்திற்கு நேரடியாக வருபவர்களை நேர்முக தேர்வின் மூலமாகவும் பணியமர்த்த முடியும்.

II சிறு வினாக்கள் –

1. **ஆட்சேர்ப்பு வரையறு.**

ஆட்சேர்ப்பு என்பது தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்கள் இருக்கும் இடத்தை அறிவது அடையாளம் காண்பது மற்றும் ஈர்க்கும் செயல்முறை ஆகும் – பெர்க்மேன் மற்றும் டெய்லர்

2. **உள் மூல ஆட்சேர்ப்பின் அம்சங்கள் யாவை ?**

- ✓ இடமாற்றம்
- ✓ மேம்படுத்துதல்
- ✓ பதவி உயர்வு
- ✓ பதவி இறக்கம்
- ✓ பழைய ஊழியர்களின் பரிந்துரை
- ✓ வேலை சுழற்சி
- ✓ தக்க வைத்தல்

3. **விளம்பரத்திற்கும் கோரப்படாத விண்ணப்பங்களுக்கும் இடையே உள்ள இரண்டு வேறுபாடுகளை தருக.**

அடிப்படை	விளம்பரம்	கோதரப்படாத விளம்பரம்
பொருள்	பணியாளர்களை தேடும் பொருட்டு விளம்பரம் செய்யப்படுகின்றது.	வேலை தேடுவோர் தன்னிச்சையாக வேலை வேண்டி விண்ணப்பம் செய்யப்படுகிறது.
தெரிந்து கொள்ளல்	இதன் மூலம் வேலைக்கு தேவைப்படும் தகுதி , வழங்கப்படும் சம்பளம் ஆகியவற்றை தெரிந்து கொள்ள முடியும்.	வேலை தேடுவோர் தன்னுடைய தகுதி எதிர்பார்க்கும் சம்பளம் போன்ற விவரங்களை தருகின்றரார்.
உறுதிநிலை	விளம்பரம் தரும் நிறுவனத்தில் பணியிடம் காலியாக உள்ளது என்பதை உறுதியாக நம்பலாம்.	விண்ணப்பிக்கும் நிறுவனத்தில் பணியிடம் காலியாக உள்ளது என்பதை உறுதியாக சொல்ல முடியாது.

4. வேலைவாய்ப்பு இணையதளங்களின் முக்கியத்துவம் என்ன ?

✓ நிறுவனங்கள் வேலைவாய்ப்பு இணையதளங்களைப் பயன்படுத்தி தாங்கள் எதிர்பார்க்கும் தகுதியுடைய பணியாளர்களை தேர்வு செய்து காலியிடங்களை பூர்த்தி செய்யலாம்.

5. ஆட்சேர்ப்புச் செயல்பாட்டில் உள்ள படிநிலைகளை கூறுக.

i. ஆட்சேர்ப்பு திட்டமிடல்
ii. காலிப்பணியிடங்களை தீர்மானித்தல்
iii. வளங்களை கண்டறிதல்
iv. விளம்பரம் குறித்த தகவலை உருவாக்குதல்
v. பொருத்தமான விளம்பரம் முறையை தேர்ந்தெடுத்தல்

III பெரு வினாக்கள் –

1. ஆட்சேர்ப்பின் பல்வேறு முறைகளை விளக்குக.

அக வளங்கள்:

இடமாற்றம்

ஒரு துறையில் இருக்கும் உபரி பணியாளர்களை பற்றாக்குறை உள்ள மற்ற துறைகளுக்கு பணி மாற்றம் செய்வதன் மூலம் காலி பணியிடங்களுக்கு தேவையான பணியாளர்களை எளிமையான வழியில் நிரப்பலாம்.

மேம்படுத்துதல்:

பணியாளர்கள் கீழ்மட்ட நிலையிலிருந்து மேல்மட்ட நிலை நோக்கி செல்ல செயல்திறன் மதிப்பீட்டு முறை உதவுகிறது.

பதவி உயர்வு:

பணிமூப்பு மற்றும் தகுதியின் அடிப்படையில் பணியாளர்கள் நிறுவன அமைப்பின் படிநிலையில் உள்ள கீழ்மட்ட நிலையிலிருந்து மேல்மட்ட நிலைக்கு சென்று பணி புரிய வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

பதவி இறக்கம்:

பணியில் தொடர்ந்து குறைவான செயல்திறனை வெளிப்படுத்தும் பணியாளர், செயல்திறனின் முக்கியத்துவத்தை உணரும் வகையில் அவரை மேல்நிலை பணியிலிருந்து கீழ்நிலைபணிக்கு மாற்றிவிடுவது பதவி இறக்கம் எனப்படுகிறது.

பழைய ஊழியர்களின் பரிந்துரை:

பழைய பணியாளர்களை திருப்திப்படுத்த அவர்களது உறவினர்கள் அல்லது நண்பர்களை வேலைக்கு அமர்த்தலாம்.

புற வளங்கள் –

நேர்முகத் தேர்வு:

வேலைதேடி நிறுவனத்திற்கு நேரடியாக வருபவர்களைநேர்முக தேர்வின் மூலமாகவும் பணியமர்த்த முடியும்

வளாக தேர்வு:

கல்வி நிறுவனங்களுக்கு நேரடியாக சென்று நல்ல கல்வித் தகுதியுடைய விண்ணப்பதாரர்களை வளாகத் தேர்வின் மூலம் தேர்ந்தெடுக்கலாம்.

தொழிற்சாலை வாயிலில் ஆட்சேர்ப்பு:

பொதுவாக சாதாரண அல்லது தற்காலிக திறனற்ற ஊழியர்கள் இந்த வழியின் மூலம் ஆட்சேர்ப்பு செய்யப்படுகின்றனர்.

போட்டி நிறுவனங்கள்: உயர் ஊதியம் மற்றும் அதிக பலன்கள் வழங்குவதன் மூலம் போட்டி நிறுவனங்களில் உள்ள திறமையான பணியாளர்களை தம்முடைய நிறுவனத்தில் பணியாற்ற ஈர்க்கும் செயல் பணியாளர்வேட்டை என அழைக்கப்படுகிறது.

2. **புற வள ஆட்சேர்ப்பின் முக்கியத்துவத்தை விவரியுங்கள்.**

i. இணையதளம் மூலம் ஆட்சேர்ப்பிற்கானபுதிய வழிகளைவடிவமைத்தல்.

ii. பணி வாழ்க்கைசமநிலையை ஊக்குவிப்பதில் மனிதவளத் துறைபங்கை மேம்படுத்துதல்.

iii. வாய்ப்பு அலுவலகங்களில் பதிவுசெய்வதற்கான செயல்முறையை எளிதாக்குதல்.

iv. புதிய வேலைகள் மற்றும் புதிய வேலைவாய்ப்புகள் இடையேயான தேடலின் நேர இடைவெளியை குறைத்தல்.

v. பொது மற்றும் தனியார்துறை இரண்டிலும் வேலைவாய்ப்புகளை மேம்படுத்துவதற்கான கொள்கைகளை உருவாக்குதல்.

3. **ஆட்சேர்ப்பினை பாதிக்கும் காரணிகளை பற்றி விரிவாக விளக்குக**

இடமாற்றம் –

ஒரு துறையில் உள்ள பணியாளர்களை மற்றொரு துறைக்கு மாற்றுவதன் மூலம் ஒரு நிறுவனத்தில் புதிய ஆட்சேர்ப்பு நடைபெறாது.

பழைய ஊழியர்களின் பரிந்துரை –

பழைய ஊழியர்களின் பரிந்துரை காரணமாக அவர்களின் உறிவனை அல்லது நண்பர்களை பணிக்கு அமர்த்துவது ஆட்சேர்ப்பினை பாதிக்கும்.

இறப்பு –

இறந்த பணியாளர்களுக்குப் பதிலாக அவருடைய சட்ட வாரிசு அல்லது அவரைச் சார்ந்த ஒருவருக்கு வேலை வாய்ப்பு வழங்குவதன் மூலம் புதிய ஆட்சேர்ப்பு பாதிக்கப்படுகிறது.

பதவி உயர்வு –

பதவி உயர்வின் காரணமாக சில வேலையில் தகுதியில்லாத ஒருவர் பதவி உயர்வு பெறுவதால் ஆட்சேர்ப்பு பணி பாதிக்கப்படுகிறது.

ஆட்குறைப்பு –

ஒரு நிறுவனத்தில் திடீரென ஏற்படும் நட்டத்தினால் ஆட்குறைப்பு ஏற்படுகிறது.

4. ஆட்சேர்ப்பு மற்றும் தேர்வினை வேறுபடுத்திக் காட்டுக.

அடிப்படை	ஆட்சேர்ப்பு	தேர்ந்தெடுத்தல்
பொருள்	பணியாளர்களைத் தேடும் மற்றும் அவர்களை வேலைக்கு விண்ணப்பிக்கத் தூண்டும் நடவடிக்கை ஆள்சேர்ப்பு ஆகும்.	பொருத்தமான வேலைக்கு பொருத்தமான விண்ணப்பதாரரை தேர்ந்தெடுத்து பணி வழங்குதல் பணியமர்த்தல் ஆகும்.
அணுகுமுறை	நேர்மையான அணுகுமுறை	எதிர்மறையான அணுகுமுறை
நோக்கம்	காலியாக உள்ள பணிக்கு அதிக அளவிலான விண்ணப்பதாரரை அழைப்பது	பொருத்தமான விண்ணப்பதாரரை தேர்ந்தெடுத்துவிட்டு மீதமுள்ள நபர்களை நீக்குவது
வரிசை	முதல் படி	இரண்டாம் படி
முறை	சிக்கனமான முறை	செலவு மிகுதியான முறை
ஒப்பந்த உறவு	ஒப்பந்த அடிப்படையில் உறவை உருவாக்குவதில்லை	ஒப்பந்த அடிப்படையில் உறவை உருவாக்குகிறது.

5. ஆட்சேர்ப்பின் முக்கியத்துவம் பற்றி விவாதியுங்கள்.

- ✓ நடப்பு மற்றும் எதிர்கால பணி தேவைகளை தீர்மானிக்கிறது.
- ✓ குறுகிய காலப் பணியாளர்களின் நிகழ்வைக் குறைப்பதில் உதவுகிறது.
- ✓ பல்வேறு ஆட்சேர்ப்பு நுட்பங்களின் செயல்திறனை மதிப்பிடுவதில் உதவுகிறது.
- ✓ முதலாளிகளுடன் சாத்தியமான பணியாளர்களை இணைக்கிறது.
- ✓ நிறுவனத்தின் தற்போதைய மற்றும் எதிர்கால திட்டங்களை தீர்மானிக்கிறது.

11. பணியாளர் தேர்ந்தெடுத்தல்

I. குறு வினாக்கள் –

1. தேர்ந்தெடுத்தல் என்றால் என்ன ?

- ✓ தேர்ந்தெடுத்தல் என்பது பணி நாடுவோரை வேறுபடுத்திப் பார்த்து ஆய்ந்தறிந்து சரியான நபரை உரிய பணிக்கு அடையாளம் கண்டு அப்பணிக்கு அவரை வெற்றிகரமாக பணியமர்த்தும் நிலை ஆகும்.
- ✓ தேர்ந்தெடுத்தல் என்பது விண்ணப்பதாரர்களை வகைப்படுத்தி பணிக்கு மிகவும் பொருத்தமானவரை தேர்ந்தெடுப்பது ஆகும்.

2. நேர்க்காணல் என்றால் என்ன ?

- ✓ நேர்க்காணல் என்பது தேர்ந்தெடுப்பவர் மற்றும் தேர்ந்தெடுக்கப்படுபவர் இருவரும் முகத்திற்கு முகம் பார்த்து அறிந்து உரையாடுவது ஆகும்.

3. நுண்ணறிவு பரிசோதனை என்றால் என்ன ?

- ✓ நுண்ணறிவுத் திறன் சோதனை என்பது ஒருவகை உளவியல் ரீதியிலான சோதனை ஆகும்.
- ✓ மூளையின் சிந்திக்கும் ஆற்றல், மனத்திறன் நுண்ணறிவு போன்றவற்றை சோதிக்க பயன்படும்.
- ✓ நுண்ணறிவு எண் என்ற அளவீட்டால் இது அளவிடப்படுகிறது.

4. சோதனை குறித்து நீவிர் அறிவது யாது ?

- ✓ விண்ணப்பதாரர் பணிக்கு தேவையான கல்வித் தகுதி மற்றும் அறிவினை பெற்றவரா என உறுதிபடுத்திக் கொள்ள மேற்கொள்ளப்படுவதே சோதனை ஆகும்.
- ✓ சோதனை திறன் சோதனை , ஆளுமை சோதனை என இரு வகைப்படும்.

5. தன்விளக்கக் குறிப்பு பற்றி நீவிர் அறிவது யாது ?

- ✓ விண்ணப்பதாரர் ஒரு நிறுவனத்திற்கு விண்ணப்பிக்கும் பொழுது , பணி அனுபவ காலம் , கல்வித்தகுதி , மதிப்பெண் , பணி நிபுணத்துவம் , பணி தொடர்பு மற்றும் நடத்தைகள் பற்றி குறிப்பிடப்படுவதே தன்விளக்க குறிப்பாகும்.

6. பணியமர்த்துதல் என்றால் என்ன ?

- ✓ சரியான நபருக்கு சரியாயன வேலை வாய்ப்பை அளிக்கும் செயல்முறையே பணியமர்த்தல் ஆகும்.
- ✓ பணியமர்த்தல் என்பது தேர்ந்தெடுக்கப்பட்ட நபருக்கு ஒரு குறிப்பிட்ட வேலையை வழங்குவதற்கான செயல்முறையாகும்.

II. சிறு வினாக்கள் –

1. மன அழுத்த நேர்காணல் என்றால் என்ன ?

- ✓ மன அழுத்த நேர்காணலில் விண்ணப்பதாரரிடம் வேண்டும் என்றே மன அழுத்தம் தரும் வகையிலான கேள்விகள் கேட்கப்படும்.
- ✓ உணர்ச்சிகளை கட்டுப்படுத்துதல் மற்றும் மன அழுத்தத்தை சமாளிக்கும் திறனை சோதிக்க இத்தகைய நேர்காணல் நடத்தப்படுகிறது.
- ✓ மன அழுத்த சூழ்நிலையில் விண்ணப்பதாரர் எவ்வாறு எதிர்வினையாற்றுகிறார், பதிலளிக்கிறார் என்பதை உற்று நோக்கி அப்பணிக்கு அவர் பொருத்தமானவர் தானா என சோதிக்கப்படுகிறது.

2. கட்டமைக்கப்பட்ட நேர்காணல் என்றால் என்ன ?

- ✓ இந்நேர்காணல் முன் கூட்டியே திட்டமிட்டு நடத்தப்படுகிறது.
- ✓ நேர்காணலில் கேட்கப்பட வேண்டிய கேள்விகள் முன் கூட்டியே தயாரிக்கப்பட்டு அதன் அடிப்படையில் நடத்தப்படுவது ஆகும்.
- ✓ நேர்காணலில் விண்ணப்பதாரர் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில் தர வரிசைப்படுத்தப் படுகிறார்கள்.

3. தேர்வுச் சோதனையின் வகைகள் யாவை ?

தேர்வு சோதனை இரு வகைப்படும். அவை

திறன் சோதனை	**ஆளுமை சோதனை**
மனோபாவச் சோதனை	ஆர்வச் சோதனை
அடைவுச் சோதனை	ஆளுமைச் சோதனை
நுண்ணறிவுச் சோதனை	செயல்திறன் சோதனை
முடிவெடுக்கும் திறன் சோதனை	மனோபாவச் சோதனை

4. அடைவுச் சோதனை குறித்து நீவிர் அறிவது யாது.

- ✓ குறிப்பிட்ட துறையில் விண்ணப்பதாரர் பெற்றுள்ள திறன் குறித்து அளவிடும் சோதனையே அடைவுச் சோதனை எனப்படும்.
- ✓ இதனை அறிவுத்திறன் சோதனை எனவும் அழைக்கலாம்.
- ✓ கல்வி நிறுவனங்களில் நடத்தப்படும் சோதனை அடைவுச் சோதனை முறையை சார்ந்ததாகும்.

5. ஒரு பணியாளரின் மருத்துவப் பரிசோதனை ஏன் அவசியமாகிறது ?

1. சம்பந்தப்பட்ட வேலைக்கான உடல் தகுதி உடையவரா என அறிய.
2. புதிதாகத் தேர்ந்தெடுக்கும் பணிநாடுநருக்கு இருக்கும் தொற்று நோய்களிலிருந்து வியாபார நிறுவனத்தில் முன்னரே பணியாற்றும் பணியாளர்களின் உடல் நலனை காக்க.
3. பணியாளரை பணியமர்த்திய பின் ஏற்படும் அபரிமிதமான மருத்துவ சிகிச்சைக்கான செலவுகளை தடுக்க.

6. மனோபாவச் சோதனை என்றால் என்ன ?

- ✓ மனோபாவச் சோதனை என்பது குறிப்பிட்ட பணிக்கு விண்ணப்பதாரர் எந்த அளவிற்கு பொருத்தமானவர் என்பதை அளவிட உதவுகிறது.
- ✓ இச்சோதனை பணியாளரின் பன்முகத் திறன்களை அளவிடவும்
- ✓ பணியாளரின் எதிர்கால செயல்திறனை முன்கணிக்கவும் பயன்படுகிறது.

7. உயர் மட்டக் குழு சோதனை என்றால் என்ன ?

- ✓ விண்ணப்பதாரரிடம் பலர் அடங்கிய ஒரு குழு நேர்காணல் செய்தால் அது உயர்மட்ட குழு நேர்காணல் ஆகும்.
- ✓ பொதுவாக தலைமை பொறுப்பேற்பவர், சம்பந்தப்பட்ட துறையின் நிபுணர்கள், உளவியல் நிபுணர்கள், சிறுபான்மையினரின் பிரதிநிதிகள் இக்குழுவில் இடம் பெற்றிருப்பர்.
- ✓ ஒவ்வொருவரும் கேள்விகளைக் கேட்டு பதில் பெற்று அதற்குரிய மதிப்பெண்களை வழங்குவார்கள்.
- ✓ இறுதியாக அனைவர் வழங்கிய மதிப்பெண்கள் மொத்தமிடப்பட்டு அம்மொத்த மதிப்பெண் அடிப்படையில் விண்ணப்பதாரர்கள் வரிசைப்படுத்தப்படுவார்கள்.
- ✓ நேர்காணலில் ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தனித்தனியே ஒரு உயர்மட்ட குழுவின் முன் அமர்ந்து அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு விடையளிப்பர்.
- ✓ உயர் பதவிகளுக்கான நேர்காணல் இவ்வகையில் அமைக்கப்படுகிறது.

8. தேர்வு நேர்காணலின் வகைகளை பட்டியலிடுக.

1. ஆரம்ப நேர்காணல்
2. வடிவமைக்கப்பட்ட நேர்காணல்
3. உயர்மட்ட குழு நேர்காணல்
4. தொலைபேசி நேர்காணல்
5. குழு நேர்காணல்
6. ஆழ்ந்த நேர்காணல்
7 வடிவமைக்கப்படாத நேர்காணல்
8 .மன அழுத்த நேர்காணல்
9. இணைய வழி நேர்காணல்
10. காணொலி கலந்துரையாடல் நேர்காணல்

III பெரு வினாக்கள் –

1. **பல்வேறு வகையான சோதனைகளை சுருக்கமாகக் கூறுக.**

திறன் சோதனை

மனோபாவச் சோதனை ;–

✓ மனோபாவச் சோதனை என்பது குறிப்பிட்ட பணிக்கு விண்ணப்பதாரர் எந்த அளவிற்கு பொருத்தமானவர் என்பதை அளவிட உதவுகிறது.
✓ இச்சோதனை பணியாளரின் பன்முகத் திறன்களை அளவிடவும்
✓ பணியாளரின் எதிர்கால செயல்திறனை முன்கணிக்கவும் பயன்படுகிறது.

அடைவுச் சோதனை ;–

✓ குறிப்பிட்ட துறையில் விண்ணப்பதாரர் பெற்றுள்ள திறன் குறித்து அளவிடும் சோதனையே அடைவுச் சோதனை எனப்படும்.
✓ இதனை அறிவுத்திறன் சோதனை எனவும் அழைக்கலாம்.
✓ கல்வி நிறுவனங்களில் நடத்தப்படும் சோதனை அடைவுச் சோதனை முறையை சார்ந்ததாகும்.

நுண்ணறிவுச் சோதனை ;–

✓ நுண்ணறிவுத் திறன் சோதனை என்பது ஒருவகை உளவியல் ரீதியிலான சோதனை ஆகும்.
✓ மூளையின் சிந்திக்கும் ஆற்றல், மனத்திறன் நுண்ணறிவு போன்றவற்றை சோதிக்க பயன்படும்.
✓ நுண்ணறிவு எண் என்ற அளவீட்டால் இது அளவிடப்படுகிறது.

முடிவெடுக்கும் சோதனை ;–

✓ இச்சோதனை விண்ணப்பதாரரின் சூழ்நிலைக்கேற்ப முடிவெடுக்கும் திறன் மற்றும் காரணப்படுத்தும் திறன் போன்றவற்றை சோதிக்க பயன்படுகிறது.

ஆளுமைச் சோதனை

ஆர்வச் சோதனை ;–

இச்சோதனை தேர்ந்தெடுக்கப்பட்டவரின் ஆர்வம் எத்துறையில் மிகுதியாக உள்ளது என்பதை அறிந்து அத்துறையில் அவருக்கு மிகுந்த ஆர்வமுள்ள பணியை அவருக்கு ஒதுக்க பயன்படுத்தப்படுகிறது.

ஆளுமைத்திறன் ஆய்வுத் தேர்வு

மனிதர்களை நிர்வகித்து ஆளும் திறன், அதிகாரம் செலுத்தும் திறன், தன்னம்பிக்கை போன்ற ஆளுமைத் திறன்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவரிடம் எந்த அளவுக்கு உள்ளது என்பதை இச்சோதனை மூலம் கண்டறியப்படுகிறது.

செயல் திறன் ஆய்வுத் தேர்வு

செயலாற்றும் வேகத்தினை அளவிட இச்சோதனை பயன்படுகிறது.

. உளவியல் ஆய்வுத் தேர்வு

இச்சோதனை விண்ணப்பதாரரது சக மனிதர்கள், சூழ்நிலைகள், செயல்பாடுகள் மற்றும் அவை சார்ந்த மன நிலையை அளவிடுவதாகும்.

2. பணியாளர்களை தேர்ந்தெடுப்பதற்கான முக்கியமான நேர்க்காணலின் வகைகளை விளக்குக.

ஆரம்ப நேர்காணல்

- ✓ விண்ணப்பதாரர்களின் குறிப்பிட்ட பணிக்கான பொருத்தப்பாட்டை அறிய ஆரம்ப நேர்காணல் நடத்தப்படுகிறது.
- ✓ இது ஆரம்ப கட்டத்திலேயே தேவையற்ற விண்ணப்பதாரரை, அதாவது பணிக்கான அடிப்படை தகுதிகள் அற்ற விண்ணப்பதாரரை நீக்க நடத்தப்படுகிறது.
- ✓ இது நேரம், பணிச்சுமை மற்றும் செலவை கட்டுப்படுத்த உதவுகிறது.

வடிவமைக்கப்பட்ட நேர்காணல்

- ✓ இது முன் கூட்டியே திட்டமிட்டு நடத்தப்படுகிறது.
- ✓ நேர்காணலில் கேட்கப்பட வேண்டிய கேள்விகள் முன் கூட்டியே தயாரிக்கப்பட்டு அதன் அடிப்படையில் நடத்தப்படுவது.
- ✓ நேர்காணலில் விண்ணப்பதாரர் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில் தரவரிசைப்படுத்தப்படுகிறார்கள்.

வடிவமைக்கபடாத நேர்காணல்

- ✓ இது கட்டமைக்கப்பட்ட நேர்காணலுக்கு நேர்மாறானது.
- ✓ சுதந்திரமான மற்றும் வெளிப்படையான பரஸ்பர கருத்துப் பரிமாற்றம் இருக்கும் வகையில் நேர்காணல் சூழல் இருக்க வேண்டும்.
- ✓ இங்கு எதுவும் முன்கூட்டி திட்டமிடப்படுவதில்லை.
- ✓ நேர்காணலில் அப்போதிருக்கும் சூழல், மனநிலை போன்றவற்றின் அடிப்படையில் கேள்விகள் அமையும். கேள்விகள் முன்கூட்டி திட்டமிடப்படுவதில்லை.

உயர்மட்ட குழு நேர்காணல்

- ✓ விண்ணப்பதாரரிடம் பலர் அடங்கிய ஒரு குழு நேர்காணல் செய்தால் அது உயர்மட்ட குழு நேர்காணல் ஆகும்.
- ✓ பொதுவாக தலைமை பொறுப்பேற்பவர், சம்பந்தப்பட்ட துறையின் நிபுணர்கள், உளவியல் நிபுணர்கள், சிறுபான்மையினரின் பிரதிநிதிகள் இக்குழுவில் இடம் பெற்றிருப்பர்.
- ✓ ஒவ்வொருவரும் கேள்விகளைக் கேட்டு பதில் பெற்று அதற்குரிய மதிப்பெண்களை வழங்குவார்கள்.
- ✓ இறுதியாக அனைவர் வழங்கிய மதிப்பெண்கள் மொத்தமிடப்பட்டு அம்மொத்த மதிப்பெண் அடிப்படையில் விண்ணப்பதாரர்கள் வரிசைப்படுத்தப்படுவார்கள்.
- ✓ நேர்காணலில் ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தனித்தனியே ஒரு உயர்மட்ட குழுவின் முன் அமர்ந்து அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு விடையளிப்பர்.
- ✓ உயர் பதவிகளுக்கான நேர்காணல் இவ்வகையில் அமைக்கப்படுகிறது.

தொலைபேசி நேர்காணல்

- ✓ இம்முறையில் விண்ணப்பதாரர் தொலைவு காரணமாக நேர்காணல் நடக்கும் இடத்திற்கு நேரில் வர இயலாத போது இவ்வகையான தொடக்க நிலை நேர்காணல் நடத்தப்படுகிறது.
- ✓ இதில் விண்ணப்பித்தவர்களின் விவரங்களை தொலைபேசி வழியாகவே அறியப்பட்டு தேவையற்றவர்கள் ஆரம்ப நிலையிலேயே நீக்கப்படுகின்றனர்.

3. **பணியமர்த்தல் கொள்கைகளை விளக்குக.**

முதலில் வேலை, அடுத்து மனிதர்

- ✓ பணியின் தேவைக்கேற்ப பணியாளர் வேலையில் அமர்த்தப்பட வேண்டும்.
- ✓ வேலைக்கு தேவைப்படும் விண்ணப்பதாரர் மற்றும் அவரது தகுதியில் எவ்விதமான சமரசமும் இருக்கக்கூடாது.
- ✓ 'முதலில் வேலை அடுத்து மனிதர்" என்பது வேலைவாய்ப்பு கொள்கைகளாக இருக்கவேண்டும்.

வேலை வாய்ப்பு

- ✓ புதிய ஊழியர்க்கு தகுதிக்கு அதிகமான அல்லது குறைவான வேலை வழங்கப்படக்கூடாது.
- ✓ தகுதியை அடிப்படையாகக் கொண்டு மனிதர்களுக்கு வேலைவழங்கப்பட வேண்டும்.

விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்

- ✓ பணி தொடர்பாக பணியிடத்தில் நிலவும் விதிமுறைகள் மற்றும் கலாச்சாரம் ஆகியவற்றை பணியாளர் பரவலாகத் தெரிந்து கொள்ளவேண்டும்.

அபராதங்கள் ற்றிய விழிப்புணர்வு

- ✓ ஊழியர்தவறு செய்தாலோ அல்லது அவரால் ஏதேனும் இழப்பு ஏற்பட்டாலோ அதன் காரணமாக அவருக்கு வழங்கப்படும் தண்டனைமற்றும் அபராதம் குறித்த விழிப்புணர்வினை அவர் பெற்றிருக்க வேண்டும்.

விசுவாசம் மற்றும் ஒத்துழைப்பு

- ✓ பணியாளர்களுக்கு பணியமர்த்தும் போது அவருக்குள் விசுவாசம் மற்றும் ஒத்துழைப்பு உணர்வினை வளர்க்கும் முயற்சியினை மேற்கொள்ள வேண்டும்.
- ✓ அதன் மூலம் அவர் வேலை மற்றும் நிறுவனம் குறித்த அவரது பொறுப்புகளை சிறப்பாக உணர்ந்து கொள்ளஇயலும்.

12. பணியாளர் பயிற்சி முறை

I. **குறு வினாக்கள் –**

1. **பயிற்சி முறை என்றால் என்ன ?**

- ✓ பயிற்சி என்பது புதிய திறமையை அதிகரிப்பது, சிக்கலை தீர்ப்பதற்கான நுணுக்கத்தினை அறிவது மற்றும் தொழில் நுட்ப அறிவு ஆகியவற்றை மேம்படுத்தும் செயல் ஆகும்.

2. **வழிகாட்டுதல் பயிற்சி முறை என்றால் என்ன ?**

- ✓ வழிகாட்டுதல் பயிற்சி முறையில் ஒரு பணியாளர்தங்களின் அறிவு மற்றும் அனுபவத்தை பகிர்ந்து கொள்ளும் செயல்முறை ஆகும்.
- ✓ இது பெரும்பாலும் நிர்வாக ஊழியர்களுக்காக பயன்படுத்தப்படுகிறது.

3. **பங்கேற்று நடித்தல் என்றால் என்ன ?**

- ✓ பயிற்றுவிப்பாளர்கள் இந்த முறையில் பதவியின் சூழ்நிலையை அல்லது பதவியில் நியமிக்கப்பட்ட பாத்திரத்தை விளக்குவார்.
- ✓ அவர்கள் எந்த ஒத்திகையும் இல்லாமல் ஒதுக்கப்படும் பாத்திரங்கள் செயல்பட வேண்டும்.

- ✓ முன் தயாரிக்கப்பட்ட உரையாடல்கள் எதுவும் இல்லை. எனவே அவர்கள் எந்த வகையிலும் பங்கேற்காமல் பங்கு வகிக்கவேண்டும்.

4. மின்னணு கற்றல் முறை பற்றி கூறுக.

- ✓ மின்னணு கற்றல் முறை என்பது பாரம்பரிய பயிற்சி வகுப்பறையில் அல்லது அலுவலகத்தில் தொழில் நுட்ப செயல்முறையை பயன்படுத்துவதாகும்.

II. சிறு வினாக்கள் –

1. தொழிற்சாலைக்குள் பயிற்சி என்றால் என்ன ?

- ✓ பயிற்சி நோக்கத்திற்காக செயற்கையாக உருவாக்கப்படும் உண்மையான வேலை சூழலைப் போல ஊழியர்களுக்கு பயிற்சியளிக்கும் முறை தொழிற்சாலைக்குள் பயிற்சி முறை ஆகும்.
- ✓ இந்த வகையான பயிற்சி அளிப்பதன் மூலமாக தொழிற்சாலையில் உள்ள இயந்திரங்களுக்கு எவ்வித சேதாரமும் இழப்பும் ஏற்படாமல் தவிர்க்க முடியும்.
- ✓ உ.தா. ஓட்டுனர்கள், விமானிகள்.

2. பணிவழி பயிற்சி பற்றி நீ அறிவது யாது ?

- ✓ பணிவழி பயிற்சி என்பது பணி செய்யும் இடத்திலேயே பணியாளர்களுக்கு அங்குள்ள மேற்பார்வையாளரால் (அ) முன் அனுபவம் பெற்றவரால் பணி சார்ந்த போதனை அளிக்கப்படுகிறது.
- ✓ பணியாளர் பணி சார்ந்த விவரங்களை பணிச்சூழல் மூலம் கற்கிறார்.
- ✓ பணிவழி பயிற்சி ஒப்பீட்டளவில் குறுகிய காலத்தில் கற்றுக் கொள்ளக் கூடிய திறன்களை இறக்குமதி செய்வதற்கு ஏற்றது.

3. பயிற்சி திட்டத்தில் பல்வேறு படிகளை எழுதுக.



4. பயிற்சி அளிப்பவர் மற்றும் பயிற்சி பெறுபவர் பற்றி சிறுகுறிப்பு எழுதுக.

- ✓ பணியாளருக்குத் திறன்களை போதித்து பணியை சிறப்பாக செய்ய தயார் செய்யும் ஒரு நபர் பயிற்சி அளிப்பவர் ஆவார்.
- ✓ பயிற்சி அளிப்பவர் என்பவர் பயிற்சியாளர் , ஆசிரியர் வழிகாட்டல் , ஆலோசகர் , ஆலோசகர் கையேடு , குரு , மேலாளர் , கையாளுநர் , ஆசிரியர் மற்றும் கல்வியாளர் போன்றோர் ஆவர்.

III. **பெரு வினாக்கள் –**

1. **பயிற்சியின் வரைவிலக்கணம். பயிற்சியின் பல்வேறு முறைகளை விவாதிக்க ?**

வரையறுக்கப்பட்ட நோக்கத்திற்காக ஊழியர்கள் அறிவு மற்றும் திறனைக் கற்றுக் கொள்ளும் ஒழுங்கமைக்கப்பட்ட செயல்முறை". – டேல் எஸ்பீன்.

(அ) பணியிடைப் பயிற்சி

பணிவழி பயிற்சி என்பது பணி செய்யும் இடத்திலேயே பணியாளர்களுக்கு அங்குள்ள மேற்பார்வையாளரால் முன் அனுபவம் பெற்றவரால் பணிசார்ந்த போதனை அளிக்கப்படுகிறது.

வழிகாட்டுதல் பயிற்சி முறை ;

- ✓ வழிகாட்டுதல் பயிற்சி முறையில் ஒரு பணியாளர்தங்களின் அறிவு மற்றும் அனுபவத்தை பகிர்ந்து கொள்ளும் செயல்முறை ஆகும்.
- ✓ இது பெரும்பாலும் நிர்வாக ஊழியர்களுக்காக பயன்படுத்தப்படுகிறது.

பணி சுழற்சி அல்லது வேலை சுழற்சி முறை ;

- ✓ பயிற்சி பெறும் ஒரு பணியாளர் ஒரே வேலையை செய்து கொண்டிருக்காமல் ஒரு குறிப்பிட்டகால இடைவெளியில் ஒரு வேலையிலிருந்து மற்றொரு வேலைக்கு மாற்றப்படுகிறார்.
- ✓ ஒரு வேலையிலிருந்து மற்றொரு வேலைக்கோ அல்லது ஒரு துறையிலிருந்து மற்றொரு துறைக்கோ குறிப்பிடட காலத்திற்கு பிறகு மாற்றப்படுபவர்.
- ✓ இதனால் பணியாளரால் பலதரப்பட்ட பணி அனுபவங்களை அறிந்து கொள்ள முடிகிறது.

பணி அறிவுறுத்தல் நுணுக்க முறை ;

- ✓ இந்த முறையில், ஒரு பயிற்சியாளராக பணிபுரிபவர் தனது வேலையை மற்றும் அதன் நோக்கத்தை எவ்வாறு செய்வது என்பது குறித்து ஒரு ஊழியருக்கு சில அறிவுறுத்தல்களை அளிக்கிறார்.

தொழில் பழுகுநர் பயிற்சி முறை ;

- ✓ பயிற்றுவிப்பாளர் அல்லது பயிற்சியாளர் பயிற்றுவிப்பாளராகவோ உயர்ந்த அல்லது மூத்த தொழிலாளியிடமிருந்து வேலை அறிவையும், திறமையையும் கற்றுக் கொள்கிறார்.
- ✓ பொதுவாக மெக்கானிக்ஸ், எலெக்ட்ரிசிஸ், கைத்தொழில்கள், வெல்டர்ஸ், ஃபிட்டர் போன்ற தொழில்நுட்ப பயிற்சியாளர்களுக்கு பயிற்சிக்கான பயிற்சியளிப்பு வழங்கப்படுகிறது.
- ✓ இந்த பயிற்சி திட்டத்தின் இந்த காலம் ஒன்று முதல் ஐந்து ஆண்டுகள்வரையிலானது பயிற்சியின் போது பயிற்சியாளர் உதவித்தொகை பெறுகிறார்.

(ஆ) பணிவெளிப் பயிற்சி –

- ✓ பணியிடங்களுக்கு வெளியே பயிற்சி பெறுவது பணியிடமற்ற பயிற்சி எனப்படுகின்றது.

விரிவுரை முறை ;–

- ✓ விரிவுரை முறையின் கீழ் பயிற்றுவிப்பாளர்கள் கருத்துக்கள், கோட்பாடுகள் மற்றும் அறிவுரைகளைப் பயன்படுத்துதல் ஆகியவற்றைப் பற்றி கல்வி கற்கின்றனர்.
- ✓ கல்லூரிகள், பல்கலைகழகங்கள், ஆலோசனை மையங்கள், நிறுவனங்கள், உற்பத்தி நிறுவனங்கள், சங்கங்கள் முதலியவற்றிலிருந்து பயிற்சியாளர்கள் தேர்வு செய்யப்படுகிறார்கள்.
- ✓ பயிற்சியாளரின் பேச்சுத் திறமையாலும் மற்றும் காணல் கேட்டல் உபகரணங்களாலும் பயிற்சி அளிக்கின்றனர்.

குழு கலந்துரையாடல் முறை ;–

- ✓ மக்கள் குழு பங்கேற்கமற்றும் குறிப்பிட்ட பொருள் அல்லது ஒரு தலைப்பை விவாதிக்க குழு கலந்துரையாடலின் கீழ் பங்கேற்பாளர்கள் பல்வேறு குழுக்களாக பிரிக்கப்படுகிறார்கள்.
- ✓ ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு குறிப்பிட்ட பிரச்சனையை விவாதிக்கும்.
- ✓ ஒவ்வொரு குழுவும் தங்கள் குழுவுடன் ஆழமான விவாதத்திற்கு பிறகு தீர்வை தயார் செய்ய வேண்டும்.
- ✓ உறுப்பினர்கள் இறுதியாக குழுத் தலைவர் பார்வையாளர்களுக்கு தீர்வு வழங்க வேண்டும்.
- ✓ மாறுபட்ட பார்வை புள்ளிகளை கேட்ட பிறகு நடுவர் இறுதி தீர்வு வழங்குவார்.

பங்கேற்று நடித்தல் ;–

- ✓ பயிற்றுவிப்பாளர்கள் இந்த முறையில் பதவியின் சூழ்நிலையை அல்லது பதவியில் நியமிக்கப்பட்ட பாத்திரத்தை விளக்குவார்.
- ✓ அவர்கள் எந்த ஒத்திகையும் இல்லாமல் ஒதுக்கப்படும் பாத்திரங்கள் செயல்பட வேண்டும்.
- ✓ முன் தயாரிக்கப்பட்ட உரையாடல்கள் எதுவும் இல்லை. எனவே அவர்கள் எந்த வகையிலும் பங்கேற்காமல் பங்கு வகிக்கவேண்டும்.

மின்னனு கற்றல் முறை

- ✓ மின்னணு கற்றல் முறை என்பது பாரம்பரிய பயிற்சி வகுப்பறையில் அல்லது அலுவலகத்தில் தொழில் நுட்ப செயல்முறையை பயன்படுத்துவதாகும்.
- ✓ அலுவலகம் மின்னணு கற்றல் கூட பெரும்பாலும் இணையவழி கற்றல் அல்லது வலைபக்க அடிப்படையிலான பயிற்சியை குறிக்கிறது.

2. பணிவழி பயிற்சிக்கும் , பணிவழியற்ற பயிற்சி முறைக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை ?

அடிப்படை	பணிவழி பயிற்சி	பணிவழியற்ற பயிற்சி
விளக்கம்	பணியாளர் உண்மையான வேலை சூழலில் வேலையை புரிந்து கொள்கிறார்.	பணியாளர் பணிச் சூழலுக்கு வெளியெ பயிற்சியை பெறுகிறார்.
செலவு	செலவு குறைவான முறை	செலவு அதிகமான முறை
இடம்	வேலை இடத்திலிருந்து பயிற்சி அளிக்கப்படுகிறது	மேலாண்மை செய்யும் நிறுவனங்களுக்கு பொருத்தமான முறை
பொருத்தம்	உற்பத்தி செய்யும் அமைப்புகளுக்கு பொருத்தமான முறை	மேலாண்மை செய்யும் நிறுவனங்களுக்கு பொருத்தமான முறை
அணுகு முறை	நடைமுறை அணுகுமுறை	கோட்பாடு அணுகுமுறை
கற்றல்	அறிவைப் பெறுவதன் மூலம் கற்றல்	அனுபவத்தின் மூலம் கற்றல்
கோட்பாடு	நிறைவேற்றல் மூலம் கற்றல்	அறிவைப் பெறுவுதன் மூலம் கற்றல்

3. பயிற்சியின் நன்மைகளை விளக்குக ?

நிறுமதிற்க்கு கிடைக்கும் நன்மைகள்

i) இது ஊழியர்களின் திறமையை அதிகரிக்கிறது மற்றும் உற்பத்தி திறன் மற்றும் இலாபத்தை மேம்படுத்துகிறது.

ii) இது மூலப்பொருள் சேதத்தினையும் மற்றும் செயலற்ற நேரத்தினையும் குறைக்கிறது.

iii) இது சமீபத்திய போக்குகளுக்கு ஊழியர்களை மாற்ற உதவுகிறது.

iv) இது மேற்பார்வைக்கான நேரத்தை குறைக்கிறது.

v) பயிற்சிமுறை பணியிடத்தில் விபத்துக்களின் எண்ணிக்கை மற்றும் அதன் விளைவான இழப்பீட்டுதொகை ஆகியவற்றை இது குறைக்கிறது.

vi) பயிற்சி பணியாளர்களின் சுழற்சியைக் குறைக்கிறது.

ஊழியர்களுக்கு கிடைக்கும் நன்மைகள்

i) பணியாளர்களின் தனித்திறன் மற்றும் அறிவுத்திறனை மேம்படுத்துகிறது.

ii) குறுகிய காலத்தில் அவர்கள் பணியுயர்வு மற்றும் பண மேம்பாட்டிற்கு உதவுகிறது.

iii) தொழிலாளர் உற்பத்தித் திறனை அதிகரிக்கிறது.

iv) தொழிலாளரின் மனத்திண்மையை ஃஒழுங்குணர்வுதனை மேம்படுத்துகிறது.

v) அதிக ஊதியம் மற்றும் வெகுமதிகளுக்கு வழி கோலுகிறது.

வாடிக்கையாளருக்கு கிடைக்கும் நன்மைகள்

i) வாடிக்கையாளர்கள் சிறந்த தரமான பொருள்கள் ஃசேவையினை பெற முடிகிறது

ii) வாடிக்கையாளர்கள் புதுமையான அல்லது மதிப்பு கூட்டப்பட்டஅல்லது சிறப்பியல்புடைய பொருள்களை பெறுகின்றனர்.

PREPARED BY.

G.PRAKASH. M.COM. M.PHIL. B.ED. D.TED

GUGAI HR.SEC.SCHOOL. SALEM 6

9488270034